சிவமயம்

Registered as News
paper in Ceylon
P. M. G. O. H. A
89/ of 1939.

# இந்துசாதனம்

விரோதி வருஷ
(1889)
ஆவணிமாதம்
28-ந்வ ஆரம்பமானது

செவ்வாய் வெள்ளிதோறும் வெளிவருவது

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசுதென்றலும் வீங்கிளவேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

புத். ௫அ] யாழ்ப்பாணம்— விய ஞு சித்திரைமீ கசஉ (1946 ஏப்பிறில் 26 வெள்ளிக்கிழமை) [இல சு

## கந்தபுராணத்தின் பெருமை

[இது, மேலைப்புலோலி சதாவதானம் சதிரைவேற்பிள்ளை நாவலர் தமிழ்ச்சங்க மகாநாட்டின்போது தலைமை வகித்த பேராசிரியர் சு. சிவபாத சுந்தரமவர்கள் செய்த தலைமைப்பேருரையின் சாரமாகும்]

அன்புருவாய தமிழ்நலங் கனிந்த தண்டமிழ்ச் செல்வ, செல்விகளே! இன்று, 'நான் பெற்றபேறு பெறுக இவ்வையக மென்னும்' நாவலர் வாக்குக்கு ஏற்ப இப் பேரவையின்கண் எம்மால் 'கந்தபுராணத்தின் பெருமை' என்னும் பொருள்பற்றிப் பேச இடம் தந்த இவ்வவையாருக்கு என் வணக்கமுரித்தாகுக; கந்தபுராணத்தின் பெருமையை யென்னென்றுரைப்பது; அஃது கச்சியப்பர் ஒருவருக்கேயன்றி நம்மால் அறுதியிட்டு உரைக்கவியலாத தொன்றன்றே. ஆயினும் மறப்பெனும் பகைவன் வாரிக்கொண்டதுபோக எஞ்சியவற்றை இவண் விளம்புகின்றேன். இப் புராணம் இலக்கியப் புலவருக்கு இலக்கியமாகவும், சாத்திரப் புலவர்க்குச் சாத்திரமாகவும், சரிதைப் புலவருக்குச் சரிதையாகவும் விளங்கும் 1. இலக்கியப் புலவருக்குப் பெருங் காப்பியமாக விளங்குவதை ஒருவாறு விளக்குதும்; "பெருங் காப்பியநிலை பேசுங்காலை" யெனும் அணியியல் நூலாரின் சூத்திரத்தை நோக்கிய வழித் தோற்றமுமீறும் இல்லாததோர் தலைவனைத் தலைமையாகக் கொண்டு மிளிர்தல் வேண்டுமாதலின் இக் காப்பியத்திற்குத் தலைவனாக விளங்குவார் முருகவேள் என்பதைக் கொண்டு உணரலாம். அதை ஆசிரியர் கூறுங்கால் முருகு என்னும் மொழியே தோற்றமுமீறும் மனமும் கடந்தவோர் பொருள். மக்களைத் தன்மாட்டு இழுக்கும் சக்தியைக் கொண்டது. உன்ன உன்னப் புத்துஅமிர்தத்தையூட்டுவது; அதன் பெருமையை உங்களுக்கு ஆசிரியா வாயிலாக ஓர் செய்யுளால் உணர்த்துகின்றேன்; "அருவமு முருவுமாகி அநாதியாய்ப் பலவாய்ஒன்றாய், பிரமமாய் நின்ற சோதிப் பிளம்பதோர் மேனியாக, கருணைகூர் முகங்களாறும் கரங்கள் பன்னிரண்டும் கொண்டே ஒரு திருமுருகன் வந்தாங் குதித்தனனுலக முய்ய" என்னும் செய்யுளொன்றே சாலும். 2. ஆசிரியர்நாடு, அங்குள்ள நாடோ தொண்டை நாடு. யாறோ பாலியாறு. நகரமோ காஞ்சிமா நகரம். இவைகளைக்கூறும் வருணனைகளிலே நம் கருத்தைச் செலுத்துவாம். ஆண்டு ஆசிரியர் கடவுட் பற்றை வளர்ப்பனவாகிய அரியஉண்மைகளையும் அடியார் சரிதங்களையும் உயர்நீதிகளையும் சித்திரிக்கும் வழக்கினையுடையார் என்பதை நாம் மேல்வரிச் சட்டமாக நோக்கின் அன்னாரின் திண்மையையும் அடிகளின் பக்தியின் வண்மையையும் என்னென்பேன்! அத்தகைய புத்தமிர்தத்தை யீந்த கந்தபுராணத்தை என்னென்று சொல்வது. அவ்வமிர்தத்தை நாம் பருகவேண்டாயா? அவ்வமிர்தத்துள் ஈண்டு சில தருதும்:

"பூட்டு கார்முகந் தன்னொடும்
தோன்றிய புயலவா
பூட்டு தண்புனல் நந்தியங்
கிரிமிசை யுகுத்தல்
வேட்டு வக்குலத் திண்ணனூர்
மஞ்சனம் விமலற்(கு)
ஆட்டு கின்றதோர் தனிச்செயல்
போன்றுள தன்றே.

இச் செய்யுளின் பொருளைச் சிறிது நோக்குவாம். வானவில்லொடுதோன்றிய முகிலானது குளிர்ந்தநீரைத் தன்னுடைய வாயிலிருந்து நந்தி மலைக்கு மேலே சொரிதல் வேட்டுவ குலத்திற்றோன்றியவரும் வில்லைத் தாங்கியவருமாகிய கண்ணப்ப நாயனார் தமது வாயிலிருந்த நீரைச் சிவலிங்கத்துக்கு மேலே சொரிந்ததை யொத்தது ஈண்டு வானவில்லுங்கு நாயனாரிடத்துள்ள வில்லும் முகிலுக்கு கண்ணப்ப நாயனாரும் நந்தி மலைக்கு சிவலிங்கமும் உவமைகளாம்.

தேக்கு தெண்டிரைப் புணரிநீர்
வெம்மையைச் சிரதி
ஆக்கி வாலொளி யுலகில்விட்(டு)
ஏகலா லடைந்தோர்
நீக்க ரும்வினை மாற்றிநன்
னெறியிடைச் செலுத்திப்
போக்கின் மேயின தேசிகர்ப்
பொருவின புயல்கள்.

முகிற் கூட்டங்களானவை கடல் நீரிலுள்ள உப்பைப் போக்கி மின்னலாய ஒளியைவீசி நன்னீரைச் சொரிந்து நாட்டிற்கு நலத்தைச் செய்தன; செய்கின்றன. அஃதேபோல் மாணாக்கரிடமுள்ள வினைகளைப் போக்கி நல்லறிவையூட்டி அவர்களைச் சிவானந்தப் பெரும்பேற்றை யடைவித்து ஆன்மாக்களை வாழ்விக்கும் தேசிகரை யொத்தன.

உதிரு கின்றசிற் றுண்டிகொண்
டொலிபுனற் சடையோன்
மதுரை நாயகன் மண்சுமந்
திட்டமா நதியின்
முதிரு முத்தமிழ் விரகனே
தேடென மொய்மீன்
எதிர்பு குந்திடப் போவது
பாலியா மியாறு

ஈண்டு ஆசிரியர் எல்லாம் வல்ல இறைவன் அன்பர்கட்காக மண்சுமந்த திருவிளையாடலையும், சமய குரவர்களு ளொருவராய் மூன்றாமாண்டில் உமையம்மையின் திருமுலைப்பாலுண்டு ஞானத்தையடைந்த ஞானசம்பந்தர் சமணரை வாதில் வென்ற அற்புதத்தையும் எவ்வளவு அழகாக ஆசிரியர் அமைத்துரைத்திருக்கின்றார்! இம்மட்டோ! இவ் வரலாறுகளை யுணராதார் மக்களன்று, மாக்களே என்பதையும் குறிப்பிற் குறிப்பாக வுணர்த்தியமை அவரின் கூரிய மதியை விளக்குமன்றோ. ஒருவனைப்பற்றிப் பேசும்போது அவனுடைய பெயரை யறியாதார்க்கு அவனுடைய செயற்கரிய செயல்களைக் கூறி அவனை மக்கட்கு உணர்த்துவதுண்டு அஃதேபோல் வைகையாற்றின் நாமத்தை அறியாதாரும் சிவபிரான் மண்சுமந்ததை யறிந்திருப்பர் என்பதை யுணருமாறு சிவபிரான் "பிட்டுக்கு மண சுமந்த ஆறு" என ஆசிரியர் குறித்தனர்

சம்பந்த சுவாமிகள் சமணரை வாதில் வென்ற சரிதை உவமானத் துக்கெடுத்துரைக்கப்பட்டது.

## மலாய் நாட்டு யாழ்ப்பாணத்தவர்கள் தாய்நாடு திரும்புகின்றனர்

எப்போது தாய்நாட்டில் அடிவைப்போம் என்று ஏங்கித் தவித்துக்கொண்டிருந்த யாழ்ப்பாணத்தவர்கள் மலாய் நாட்டிலிருந்து நூற்றுக்கணக்காக யாழ்ப்பாணம் வந்து சேர்ந்திருக்கின்றனர். இன்னும் எத்தனையோ பேர் விரைவில் வர ஆயத்தமாக இருக்கிறார்கள் என்று தெரிகிறது.

இந்தவாரத்தில் மலாய் நாட்டிலிருந்து இலங்கை வந்து சேர்ந்த இலங்கை வாசிகளுக்கு இந்நாடு பிரமாதமான வரவேற்பளித்து உபசரித்தது போற்றத் தக்கது.

யாழ்ப்பாணம் வந்து சேர்ந்த மலாய் நாட்டு யாழ்ப்பாணத்தவர்களுக்குப் புகையிரத ஸ்தானங்களிலும் மற்றும் இடங்களிலும் சிற்றுண்டி தேநீர் வசதிகளும் போக்குவரத்து வசதிகளும் செய்துகொடுத்துத் தமிழ்மக்கள் தம் பழம் பெருமையை நிலைநாட்டினர்.

தமிழ்க் காங்கிரஸ் அங்கத்தினர்கள்பலர் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் வரை ஷை பிரயாணிகளுடன் வந்து அவர்களுக்கு வேண்டிய சௌகரியங்களைச் செய்துகொடுத்தனர். யாழ்ப்பாணப் பிரபலஸ்தர்கள் பலர் அவர்களுக்கு யாழ்ப்பாணப் புகையிரதஸ்தானத்தில் வரவேற்பளித்தனர்.

## சுயராஜ்ய இந்தியாவில் ராணுவத்தின் வேலை

வேலைநிறுத்தம் செய்யக்கூடாத துறைகளில் தோட்டிகள் வேலையும் ஒன்றாகும் என்றும், அவர்களின் பலாத்காரத்தைச் சமூகம் எப்படித் தடுத்து, சுகாதாரத்தை நிலைநிறுத்த வேண்டும் என்பதைப்பற்றியும் மகாத்மாகாந்தி ஒரு கட்டுரையில் விளக்குகிறார்.

"சுயராஜ்யம் வந்ததும், ராணுவம் நமது வசமாகும். அவர்கள் இதுகாறும் மக்கள்மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்வதிற் பயிற்சி பெற்று வந்தனர் இனி ராணுவத்தினரை நாம் தோட்டிவேலை செய்தல் முதலிய சமூக ஆக்கவேலைகளுக்குப் பயன்படுத்திக் கொள்ளலாம்" என்கிறார் காந்திஜி அக்கட்டுரையில்.

---

உவமானம் உவமிக்கப்பட்ட பொருளினும் நன்கறியப்பட்ட பொருளாயிருத்தல்வேண்டும்.

ஏனெனில், சிறு குழந்தைகளும் பாலை நன்கு அறிவர். மீன்கள் ஆற்றில் எதிரேறிச் செல்லும் வழக்கத்தை நன்கு அறிவர். ஆதலால் சம்பந்த சுவாமிகள் வைகையாற்றிலிட்ட ஏட்டைப்பற்றிய கதை இதினும் நன்றாகச் சைவர்கள் யாவரும் அறிவரென்பதை யாசிரியர் உணர்த்துகின்றார். இவ்வரலாற்றை யுணராதார் சைவவேடந்தரித்து நிற்பினும்சைவர்கள் அல்லரென்பது முடிபு. இனம்பற்றிச் சிவனடியார்களது சரிதையும் இறைவனது திருவருட் செயல்களும் யாவரும் அறிதல் வேண்டுமென்ற கடமையைப் பசுமரத் தாணிபோலக் கூறியும் ஆண்டவன் அருட்டிறனையும் உணர்தலே சைவர்கள் கடமையென்பதை நாமறிய வேண்டாமா? அதைப் பிறர்க்கு எடுத்துரைக்க வேண்டாமா? அந்தோ! நம்மாசிரியர் நமக்கெடுத்துரைத்த கடமையை யறிவதே நம் கடனாகும்.

## இந்தோனேஷியாவில் மீண்டும் சண்டை

இந்தோனேஷிய தீவிர வாதிகளுக்கும் நேசதேசத் துருப்புகளுக்குமிடையிற் சண்டை ஏற்பட்டிருக்கிறதென்று பல இந்தோனேஷிய தீவுகளிலிருந்து அறிவிக்கப்பட்டிருக்கிறது.

டச்சுப் பொலீஸ்படை வகுப்பொன்றைத் தீவிர வாதிகள் தாக்கியதால் ஐந்து டச்சுப் பொலீஸ் வீரர் கொல்லப்பட்டனரென்றும், ஒருவர் காயப்படுத்தப்பட்டார் என்றும், எட்டுப்பேரைக் காணவில்லை யென்றும் பட்டேவியாவிலுள்ள நேசதேச தலைமைக் காரியாலயத்திலிருந்து இன்று அறிவிக்கப்பட்டிருக்கின்றது.

பாலி என்ற தீவில் நான்கு தீவிர வாதிகள் கொல்லப்பட்டும் 13 பேர் கைது செய்யப்பட்டுமிருக்கின்றனர் பாலி தீவுக்குக் கிழக்கே சுரபாயா பகுதியில் இந்தோனேஷியர் ஆயுதந் தாங்கியவர்களாய் மறைந்திருந்து டச்சு ரோந்து வீரர்களைத் தாக்கினர். அதனால் ஒருவர் கொல்லப்பட்டார்.

மத்திய ஜாவாவிலிருந்து ஜப்பானிய ராணுவத்தினரும் பொதுஜனங்களும் நீக்கப்பட்டு வருகின்றனரென்று இந்தோனேஷிய குடியரசு வட்டாரங்கள் இன்று அறிவித்திருக்கின்றன.

## இந்தியாவுக்கு ஜெர்மன் பொருள்கள்

பிரதாப் குமார், எம். கே. கன்புல் கே ஏ வருகிஸ் ஆகிய மூன்று இந்திய வர்த்தகப் பிரமுகர்கள் லண்டனிலிருந்து ஜெர்மனிக்குப் பிரயாணமாகிறார்கள். அங்கிருக்கும் கைத்தொழில் ஸ்தாபனங்களை இவர்கள் பார்வையிடுவார்களென எதிர்பார்க்கப்படுகிறது

இங்கு காணப்படும் கைத்தொழில் ஸ்தாபனங்களிற் கையாளப்பட்டு வந்த யுத்தகால அபிவிருத்தித் திட்டங்களை இவர்கள் பார்வையிடுவார்கள். அங்கிருக்கும் இயந்திர சாதனங்களை இந்தியாவுக்கு ஏற்றுமதி செய்வது சம்பந்தமான விஷயங்களைப்பற்றியும் இவர்கள் அங்கு ஆலோசிப்பார்கள்.

திரு.குமார் ஆக்கன்ஹம்பர்க், மன்ஹிம், நூரம்பர்க் முதலான நகரங்களுக்கு விஜயம் செய்வார். திரு. கன்புல் பேர்லின், டஸல்டோர்ப் முதலிய இடங்களுக்கும் திரு. வருகிஸ் ஹனோவர், வெய்ஸ்பாடன் முதலிய பிரபல கைத்தொழில் ஸ்தாபனங்களுக்கும் விஜயம் செய்வார்கள்.

## சீனாவில் சுபாஷ் போஸ்?

நேத்தாஜி சுபாஷ் சந்திரபோஸ் ருஷ்யாவிலே இருக்கிறார் என்பதைவிட, சீனாவிலே அவர் உயிரோடிருப்பதைத் தாம் நம்புவதாசப் படைத்தலைவி லட்சுமி சமீபத்தில் கொல்லத்தில் பத்திரிகை நிருபர்கள் மகாநாடொன்றில் கூறினார்

இந்திய தேசிய சைனியத்தினர் தனியான ஒரு ஸ்தாபனத்தின் கீழ் வேலை செய்யாமல் காங்கிரஸின் கீழ் வேலை செய்துவர வேண்டுமென வற்புறுத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாம்அர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

# இந்து சாதனம்.

யாழ்ப்பாணம், வியஸூ
சித்திரைமீ கசஉ வெள்ளிக்கிழமை

## அகில இலங்கைச் சைவ மகாநாடு

சென்றவாரம் குறிக்கப்பட்ட மூன்று தினங்களாக யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரித் தமிழ் வித்தியாசாலை மண்டபத்தில் நடைபெற்ற அகில இலங்கைச் சைவ இளைஞர் மகாநாடு மிகவுஞ் சிறப்பாக நிறைவெய்தியதெனல் மிகையாகாது; மூன்று தினங்களிலும் மேற்படி மகாநாட்டில் தலைமை வகித்தவர்களிருவரும் பேரறிஞர்களாவர்; மேலும் தென்னிந்தியாவிலிருந்து இங்கே குறித்த மகாநாட்டினரால் அழைக்கப்பெற்ற ஸ்ரீமதி கா. சோ. காஞ்சனமாலையம்மையார் இன்னிசை விரவ மூத்தினத்துஞ் செய்தசைவசம்பந்தமான பிரசங்கங்கள்கேட்பார் மனசை உருக்கிச் சிவபத்தியைப் பெருக்கும் இயல்பின; முந்திய மகாநாடுகளிற் சமூகஞ் செய்த பெண்பாலாரைக் காட்டிலும் கூடியதொகைப் பெண்பாலார் இவ்வாண்டிற் சமூகஞ் செய்து பிரசாரணங்களைக் கேட்டு மகிழ்ந்து சென்றமைக்குக் காரணம் இந்த அம்மையார் இன்னிசை பெருகப் பத்திபரவத் தேவாரம் முதலாந் திருவருட்பாக்கள் பொலியச் செய்த சிறந்த பிரசங்கங்களே யெனலாகும். திருவருட்செல்வி காஞ்சனமாலையம்மையார் போன்றோர் இடையிடையே இப்படியான மகாநாட்டிற் பிரசங்கம் செய்வதாற் பெண்பாலினரன்றி ஆண்பாலினரும் அதிக நன்மையடைவரென்பது திண்ணம்; இங்குள்ள கல்வியறிவு, சிவபக்தி சங்கீதவுணர்ச்சியென்னு மிவற்றில் திறமை வாய்ந்த பெண்மக்களும் மேற்படி யம்மையாரின் முறையிற் சமயப் பிரசாரணஞ் செய்வரேல், இந்நாட்டினர்க்குஞ் சைவ மக்களுக்கும் பெரும் நன்மையுண்டாம். இவ்வம்மையாரின் பிரசங்க மாண்பில் விருப்பங் கொண்டு யாழ்ப்பாணப் பெரும் பிரிவிலுள்ள பல ஊரார் ஆங்காங்கு இவ்வம்மையாரைத் தத்தம் ஊருக்கு அழைத்துச் சிறந்த பிரசங்கஞ் செய்து சம்மானிக்கின்றனர்;

இம்மகாநாட்டிலே பிரசங்கஞ் செய்தற்கு உடன்பட்டுச் செய்த அறிஞர்களனைவரும் தங்கள் தங்களால் இயன்ற வன்மையோடும் பயபக்தியோடும் பிரசங்கஞ் செய்தனரெனச் சொல்லுதல் மிகையாகாது; "அன்பினைல் இன்பம் ஆர்வார்" என்ற விஷயமாகத் திரு. மு ஞானப்பிரகாசம் (B. A B. Sc.) அவர்கள் செய்த பிரசாரணம் கேட்போருள்ளத்தைப் பிணிக்குந் தகையதாய்த் திட்ப நுட்பம் வாய்ந்ததாகும். திறமையோடு கூடிய இவ்வாசிரியர் போன்றோரின் பிரசங்கம் இந்நாட்டிற்கு இக்காலத்தில் இன்றியமையாததெனலாம்; திறமையோடு கூடிய சில உபாத்தியாயர்களிடத்து இக்காலத்து இடையிடையே காணப்படும் விபரீதக் கொள்கைகள், மாறுபாடான செயல்கள், தடுமாற்றத்தோடு கூடிய பேச்சுக்கள் இவ்வாசிரியரிடத்தில் இம்மியத்தனையும் இல்லையெனல் நிசமாகும்; திரு ஞானப்பிரகாசமவர்கள் போன்ற அஞ்சாநெஞ்சு படைத்த சமயாபிமானம்பூண்ட விபரீத விளக்கமற்ற திறமையோடு கூடிய ஆசிரியர் இன்னுஞ்சிலர் இந்நாட்டில் இருப்பரேல் இந்நாடானது சமய விஷயமாக மாத்திரமல்ல, ஏனைய பல விஷயங்களிலும் நன்மையடையு மென்பது திண்ணம்

இனி, இம் மகாநாட்டு மூன்றாநாள் நிகழ்ச்சியிற் சமூகஞ் செய்து "தேவார மகிமை" என்ற சிறந்த விஷயத்தைப் பீடிகையாகக்கொண்டு பிரசங்கஞ் செய்தவராகிய திருவனந்தபுரம் பிரதம நீதியரசராய் விளங்கும் "திருப்புகழ்மணி" பிரமஸ்ரீ T. M. கிருஷ்ணசாமி ஐயரவர்களின் கல்வி மாண்பும் பிரசாரண நிபுணத்துவமும் பத்தித் திறமையும், அப்பெரியாரைக் கண்டார்க்கும் அவர் செய்த பிரசங்கங்களைக் கேட்டார்க்கும் பெருமிதத்தை விளக்கு மென்பது சொல்லாமலே யமையும்.

பிரமஸ்ரீ கிருஷ்ணசுவாமி ஐயரவர்கள்போன்ற பெரியார், முன் எக்காலத்தாயினும் இதுபோன்ற மகாநாட்டில் இங்கே சமூகந்தந்து பிரசாரணஞ் செய்தனரோ என்பது சந்தேகம். கல்வியறிவின் மாண்பும், நுண்ணுணர்வும், சிவபத்தித் திறனும், கந்தரனுபூதி பெற்ற வள்ளலாராகிய அருணகிரிநாதர்மீது பாராட்டும் ஆர்வமும் ஒருங்கு சேர்ந்தாரொருவருண்டெனில், அவர் நமது கிருஷ்ணசுவாமிஐயரவர்களேயாவர்; இப்பெரியார் இம்மகாநாட்டில் மாத்திரம் பிரசங்கஞ் செய்ததோடமையாது, இந் நாட்டின் பல பாகங்களிலுமுள்ளாருடைய வேண்டுகோட்கிணங்கி ஆங்காங்குச் சென்று அமிர்ததாரையொத்த பிரசங்கமாரியை இங்குப் பொழிந்தாரெனல் மிகையாகாது.

இம்மகாநாட்டில் இம்முறை பிரேரித்து நிறைவேற்றப்பட்ட நிர்ணயங்கள் சைவசமயத்திற்கும் இங்குள்ள பொதுமக்களின் வாழ்க்கைக்கும் இன்றியமையாதன. மேலும் இம்மகாநாட்டிற் சித்தாந்த சைவத்தோடு முரணும் விஷயம் ஏதுவேனும் எடுத்தாளப்படுதல் நிறைவேற்றப்படுதலென்னுமிவைகளில்லாமை இதற்கோர் தனிச்சிறப்பெனலாகும்.

இங்ஙனமாயினும் இம்மகாநாட்டினர் இன்னும் ஆவசியகஞ் செய்யவேண்டிய அரும் பெருங் கருமங்கள் சிலவுள; இம் மகாநாட்டினர் இடையிடையே தங்கள் நிர்வாகசபைக் கூட்டங்களைக்[illegible] கள் கூட்டுவதற்கும், சமய சம்பந்தமாகவும் மக்களின் வாழ்க்கை சம்பந்தமாகவும் மாசங்கள் தோறும் கூட்டங்கள் கூட்டிப் பிரசங்கஞ் செய்வதற்கும், சமய பாடத் தேர்தல்கள் வைத்து நடத்துவதற்கும், வேற்றூர்களிலிருந்து காலந்தோறும் வரும் பிரசாரகர்கள் வசதியாகத் தங்குவதற்கும் இன்ன பிறவற்றிற்குமாக, இம்மகாநாட்டார் பொறுப்பில் ஒரு மண்டபத்தோடு கூடிய தாபனம் இருத்தல் வேண்டும்.

மேலும், யாழ்ப்பாணப்பெரும் பிரிவிலும் இலங்கையிலே தமிழ் மக்கள் சைவமக்கள் வாழும் ஏனைய ஊர்களிலும் இம் மகாநாட்டினர்க்குரிய கிளைச்சங்கங்கள் ஆங்காங்கு வைத்து நடத்தப்படல் வேண்டும்; இவற்றையெல்லாம் நிறைவேற்றுவதற்கு இன்றியமையாது வேண்டப்படுவது பொருளேயாகும். ஆதலின், இம்மகாநாட்டில் ஆர்வங் கொண்ட அங்கத்தினர் பொருள் சேர்த்தற்காகிய நல்ல உபாயங் [illegible] நீட்ட முயற்சி செய்தல் ஆவசியகமாம்.

# உலகம்பலவிதக் கதை

(முற்றொடர்—96)

### "ஆசை வெட்கமறியாது"

அன்னமென நடந்து விசாலாட்சியின் மருங்கில் மயிலென ஒதுங்கி நின்ற இரஞ்சிதத்தை இராமச்சந்திரன், "ஆசை வெட்கமறியா தென்றவாறு" தன் கண்களார அவதானித்துப் பார்த்தான்; பார்த்தனனெனினும் அவளுடைய முழுமதியன்ன முகத்தைப் பூரணமாகக் காண்டல் இராமச்சந்திரனுக்கு இயலாததாயிற்று: ஏன்? இராமச்சந்திரன் இரஞ்சிதத்தைப் பார்க்க, இரஞ்சிதம் பூமிதேவியைப் பார்த்தவண்ணம் நின்றாளாதலினாற்றான்; துறவிக்குரிய உடையுடன் நின்ற இந்த இரஞ்சிதம் இராமச்சந்திரனுடன் அதிக கூச்சமின்றிப் பேசியவள்தானே; இப்பொழுது இவளிடத்தில் வந்த மாறுதல் என்னையென்று கேட்பின், துறவியான நேரத்தில் இரஞ்சிதம் இராமச்சந்திரனை இன்னானென அறிந்துள்ளாளெனினும், இராமச்சந்திரன் இவள் இன்னளென்ற உண்மையை அறிந்திலனல்லவா? இராமச்சந்திரன் இரஞ்சிதத்தைப் பார்க்க, இரஞ்சிதம் நிலத்தைப் பார்த்தபடி நிற்க, இவர்களிருவர்க்கு மிடையே யுள்ள உண்மையான அன்பினை விசுவநாதனும் விசாலாட்சியும் பார்த்து மகிழ்ந்தார்கள்; பார்த்த கண்ணை மீட்க முடியாமல் நின்றான் இராமச்சந்திரன்; நிமிர்ந்து பார்க்க இயலாதவளாய் நின்றாள் இரஞ்சிதம்; இந்த நிலைமையி லுள்ளவர்கள் ஒருவரோடொருவர் உடனுக்குடன் வார்த்தையாடுவரென எப்படி நாம் எதிர்பார்ப்பது; "ஏன் இவர்களோடு நீங்கள் பேசுவதில்லையோ" என்று இரஞ்சிதத்தைப் புன்னகையுடன் மெல்ல வினவினள் அயலேநின்ற விசாலாட்சி; "பேசாமல் நிற்க முடியுமா" என்று விசாலாட்சிக்கு மெல்லச் சொல்லிவிட்டு, இரஞ்சிதம் தன் வரவைக்கண்டு முந்தியே இருக்கைவிட்டெழுந்து நின்ற இராமச்சந்திரன் முகத்தை நாணம் மீதூரநோக்கி "ஏன் நிற்பான், உந்த ஆசனத்தில் உட்காரலாமே" என்று ஒவ்வொரு சொல்லாகப் பன்னுதலும், "கட்டளைப்படி செய்கிறேன்" என்று புன்னகையுடன் சொல்லிவிட்டு அவன் அங்குள்ள ஆசனத்தில் இருந்தான்; 'என்பொருட்டு வெகுவாய் அலைந்துவிட்டீர்கள்" என்று பூவையெனப் புகன்றாள் இரஞ்சிதம். "அலைமையினால் வந்த குறையொன்று மில்லை" யென்று இதமுறப் பதில் சொன்னான் இராமச்சந்திரன்; இதற்கிடையில் அங்குள்ளவர்களுடைய அநுமதியோடு விசாலாட்சி அவ்விடம் விட்டகன்று சிலநிமிஷஞ் செல்வதற்கிடையில் மீண்டு தலைவாசலையடைந்து, இரஞ்சிதத்தின் அயலிற் போய்நின்று ஏதோ மெல்லச் சொல்ல, இரஞ்சிதம் அப்படிச் சொல்லியதற்கு உடன்பட்டாளாய்த் தலையசைப்ப, உடனே விசாலாட்சி தன்னையனிடம் ஏதோ தெரிவிக்க, அவன் இராமச்சந்திரனைப் பார்த்து, "நீங்கள் சிறிது பால் அருந்தவேண்டுமென்று இவர்கள் விரும்புகிறார்கள்" எனலும், இராமச்சந்திரன் அதற்குச் சம்மதிக்க, இரஞ்சிதம் அவனை அதற்காகிய அறைக்கு அழைத்துச் சென்றாள்; விசுவநாதனும் விசாலாட்சியும் தலைவாசலிலேயே இருந்தார்கள்.

### ஆளில்லாத் துக்கம் அழுதாலுந் தீராது

விசுவநாதன் விசாலாட்சியைப் பார்த்து, 'இந்த இராமச்சந்திரனுக்கு இரஞ்சிதத்தை இல்லக்கிழத்தியாக ஏற்றுக்கொள்ளப் பிரிய மென்பது அவர் எம்முடன் பேசிய பேச்சால் அறியக்கிடக்கின்றது: ஆனால், இரஞ்சிதத்தின் உள்ளக்கிடக்கை என்ன என்பதை நாம் அறியோம்; அதனை உசாவியறிவது உனது கடன்" என்று சொல்லுதலும், விசாலாட்சி "நான் ஒருவாறு இரஞ்சிதத்தின் நோக்கத்தை உசாவியுள்ளேன்; இராமச்சந்திரனுக்கு மனைவியாதற்கு இரஞ்சிதத்திற்கும் விருப்பந்தான்; ஆனால் அங்ஙனஞ் செய்யினும் தங்கள் ஊருக்கு மீண்டபின் தம் பெற்றோர் உற்றோர் உறவினருடைய சம்மதத்தையும் பெற்ற பின்பே மணஞ் செய்யவேண்டுமென்ற நோக்கம் அந்த அம்மாளிடத்திற் காணப்படுகின்றது; அது நீதியான நோக்கமென்றே நானும் நினைக்கிறேன்" என்றாள்; "அது நீதியான நோக்கந்தான்; அப்படியானால் அவர்களை விரைவில் ஊருக்கு மீண்டு செல்வதற்கான ஒழுங்குகளை நாங்கள் செய்து வைப்பதுதானே முறையாகும்" என்றான் விசுவநாதன்; "ஆகவேண்டிய ஒழுங்குகளை நாங்கள் செய்தல் வேண்டும்: ஆனால், அதில் ஒரு சங்கடமிருக்கிறது; இராமச்சந்திரனுடன் இரஞ்சிதம் பெண்பாலார் வேறெவருமின்றிக் கூடிக்கொண்டுபோதற்கு உடன்படுவாளோ என்பது அந்த அம்மாளைக் கேட்டறிய வேண்டியதாகும்; பெண்துணை யெவருமில்லையே என் செயலாமென் றெண்ணி அந்த அம்மாள் அந்த ஆளுடன் கூடிக்கொண்டு ஊருக்குப் போகநினைத்தாலும், நாங்கள் அப்படி அவர்களைப் போகவிடுதல் சரியல்லவென்று எண்ணுகிறேன்' எனக் கவலையுடன் விசாலாட்சி சொன்னாள்; விசுவநாதனும் சிறிது நேரம் யோசித்துவிட்டு, "நீ சொல்வது நியாயந்தான்: ஆனாற் பெண் துணையாக யாரை அனுப்பலாமென்பதையிட்டே யோசிக்கின்றேன்" என்றான்; "இரஞ்சிதத்தம்மாள் உங்களுடைய அன்பான சகோதரியாக விருத்தலால் அந்த அம்மாளுக்கு ஒரு பெண்துணை தேடி உடன் அனுப்ப வேண்டிய பொறுப்பு உங்களுக்குத் தானேயுரியது" என்று இதமாகச் சொன்னாள் விசாலாட்சி; "நான் என்னசெய்யலாம்; நானே துணையாகப் போவதென்றால் உடனே புறப்பட்டுப் போய்விடுவேன்; பெண் துணைக்கு நான் எங்கே போய் யாரைக் கேட்பது? ஆளில்லாத் துக்கம் அழுதாலுந் தீராது என்று பழமொழி சொல்லுவார்களே; அந்த

(தொடர்ச்சி 5ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "சேக்கிழார் கண்ட சைவப் பெருமாட்டிகள்"

[அகில இலங்கைச் சைவமகாநாட்டில், முதல் நாள், திருமயிலை சைவப் பிரசங்க இன்னிசைச் செம்மனச் செல்வியார் ஸ்ரீமதி கா. சோ. காஞ்சனமலை அம்மையார் நிகழ்த்திய பேருரை.]

உலகெலாம் உணர்ந் தோதற் கரியவன்
நிலவுலாவிய நீர்மலி வேணியன்
அலகில்சோதியன் அம்பலத்தாடுவான்
மலர்சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்.

பூழியர்கோன் வெப்பொழித்த
புகலியர்கோன் கழல் போற்றி
[illegible] மினசக் கன்மிதப்பில்
[illegible] தபிரான் அடிபோற்றி
[illegible] ஆவலூர்
வாழிதிரு [illegible] பதம்போற்றி
வன்றொண்டர் [illegible]
ஊழிமலி திருவர் [illegible]
திருத்தாள் போற்றி.

அன்பு, பொறுமை, அவாவறுத்தல் நிரம்பப்பெற்ற இக் கழகத்திற்குத் தலைமைபெற்ற தலைவர் அவர்களே, கழகத்திற் குழுமியிருக்கும் அறிஞர்களே, தாய்மார்களே, அடியேனுடைய மனமார்ந்த வணக்கம் உங்கட்கு உரித்தாகுக. அடியேனுக்குக் கொடுத்த பணியானது "சேக்கிழார் கண்ட சைவப் பெருமாட்டிகள்" என்ற விஷயம் பற்றிப் பேசுவதேயாகும். இதை யானும் பேசத் துணிந்து முன் வந்துள்ளேன்; என்றாலும் இலக்கண இலக்கியமும், சிறந்த சைவமும் நிரம்பிய இந்த யாழ்ப்பாண அகில இலங்கைச் சைவ இளைஞர் மகாநாட்டில் உள்ள பெரியார்கள் அடியையின்வாயிலாக வரும் மாபெருங் குற்றத்தை மன்னிக்கவும். இலக்கண இலக்கியம் கொஞ்சமும் தெரியாத இச்சிறுமியை இம் மேடையில் ஏற்றிப் பேசவைத்தது என்பால்வைத்த அன்பேயாகும். இதற்குக் காரணம், பல இடங்களிற் சந்தித்த திரு. சு. அண்ணாமலைபென்ற திருநாமமுடைய பெரியாரும், இலங்கை வழக்கறிஞர் திரு. அ. அருளம்பலம் என்ற நாமமுடைய பெரியாருமேயாகும். நிற்க, அடிமை யாழ்ப்பாணப் பிரயாணத்திற்கு ஆயத்தப்படும் படியானசமயத்தில் அடிமையினுடைய தலைவரிடம் அடியேனுடைய தாய்மாமன் அவர்கள் தெரிவித்தது என்னவெனில், யாழ்ப்பாணம் இலக்கணம் நிறைந்தநாடு, நீங்கள் ஜாக்கிரதையாகப்பேசி ஒழுங்காய் நடந்துகொண்டு வாருங்கள் என்பதாம். அப்போது யான் அஞ்சித்தான் இந்நாடு வந்தேன். அஞ்சித்தான இம் மன்றம் வந்தேன். மேடையிலும் நிற்கின்றேன் என்றாலும், அடியேனுடைய அச்சம் அடியோடு ஒழிந்து தீரமாய்ப் பேசுகிறேன்; ஏனென்பதைப் பின்வரும் சரித்திரச் சான்றிலிருந்து தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

சேக்கிழார்பெருமான் உலகத்திற்கு உபகாரமாக, மக்கள் பிறப்பில் மாக்களாக அமைந்துவிடாமல் மக்கள் மக்களாகவே திகழ வேண்டிக்கொடுத்த திருத்தொண்டர் புராணத்துள் தொண்டர்களுடைய தொகையைக் கூறத் தப்பெருமான் ஆணையிறைப் பாடிக் கொடுத்த சுந்தரமூர்த்தி சுவாமிகள், மனைவியார்கள் என்ன, பின்னும் தொகையில், வகைவகுத்துக் கொடுத்த எண்ணிக்கையில் திருநீலகண்ட நாயனார் மனைவியும், இளையான் குடிமாறர் மனைவியும், இயற்பகையார் மனைவியும் மானக்கஞ்சாறருடைய மனைவியும், திருநீலநக்கருடைய மனைவியும், அப்பூதியடிகளாருடைய மனைவியும் சிறுத்தொண்டருடைய மனைவியும், ஏயர்கோன் கலிக்காமருடைய மனைவியும், இன்னும் பல தாய்மார்களை, தாய் உலகம் விளங்குவானவேண்டி அவதரித்து இருந்தும், குறிப்பாக இப்போது அடியேன பேசத் துணிந்தது, திலகவதியார், புனிதவதியார், மங்கையர்க்கரசியார் என்ற சைவப் பெருமாட்டிகள்பற்றியேயாம். அவர்கள் இத்திருத்தொண்டர் புராணத்துள் உலகத்திற்கு வேண்டிய உபகாரச் செயல்கள், [illegible] யடையவேண்டிய ஒழுக்கங்கள் இவைகளுள் என்னசெய்தார்கள் என்று வினவில், முதற்படியாக உலகைத்திற்கு ஆட்சிபுரியும் அரச நிலைமையும் பின் குடிவாழ்க்கையிலுள்ள மக்களின் நன்மையுமேயாகும். அரசன் எவ்வழியோ அவ்வழியே குடிகள், குடிகள் எவ்வழியோ அவ்வழி [illegible] கொற்றவன் என்ற முறைமையை [illegible] அரசச் செவ்வினை திருந்தச்செய்து [illegible] காட்டி, வரையறுத்துக் கொடுத்தது நம் சைவப் பெருமாட்டி மங்கையர்க்கரசியாராம் தயாமணியேயாவர். அது எம்முறையெனின், சைவமும் தமிழும் சங்கமும் நிலவுவதற்கு அடிப்படையான பாண்டிய நாடாகிய மதுரைமாநகரத்தை ஆண்டுவந்த பல அரசர்களுள் ஒருவராகிய கூன்பாண்டியன் மெய்ச் சமயமாகிய சைவசமயத்தைக் கைவிட்டுப், புறச் சமயமாகிய சமண சமய குருக்கள்மார்கள் போதித்த போதனைக்கிரையில் மூழ்கிப் பாண்டியனும் சமணசமயம் புகுந்தான்; அப்போது, நம் சைவநாடு விளங்க அவதரித்த தாய்மணியாம், மண்ணிலம் திகழ் மன்னனாய் மன்னும் மணிமுடிச் சோழன் தன் மகளாம், பண்ணினேர் மொழியாள் பாண்டிமா தேவியாராகிய மங்கையர்க்கரசியார், ஆலவாயமர்ந்தசொக்கநாதரிடம் முறையிட்டுக் கொண்ட விண்ணப்பமே நம் சைவநாடு தழைப்பதற்கு ஓர் ஒப்பற்றபெருந்தமாகும்; இல்லையேல தமிழும் சைவமும் இருந்த இடம் தெரியாது மழுங்கிப்போயிருக்குமென்று அடியேனுடைய உள்ளம் தெரிவிக்கின்றது. அவைபாரத்தினில்,

"பொய்யுரை பிதற்றுமிந்தப்
புன்சமண் சுலைகட் டுண்டு
மெய்யுரை வேதநீதி வியன்பயந்
தலைச்செய் தோங்கச்
செய்யுனர் எவரோ வென்று
சிந்தையிற் கவலை பூண்டு
தையுனா ராகிக் கூடல்
நாதனை வணங்கப் போனார்"

இம்மொழியே அவருடைய விண்ணப்பமாகும். அவ் விண்ணப்பமே திருஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் மதுரையின்கண் எழுந்தருளிக் கூன்பாண்டியன் சுரந்தீர்த்து, கூன் நீக்கி, பிறவிப் பிணியும் நீக்கிக்கொள்வதற்குள்ள மார்க்கமாகிய திருநீற்றுக் காப்பேயாகும், பாண்டியன் உண்மைநெறி தவறிப் பொய்நெறிபிடித்து ஒழுகிய குற்றம் நீங்கிச் சைவன் ஆனான் அதற்குக்காரணம் சேக்கிழார் கண்ட சைவப் பெருமாட்டிகளுள் தலைசிறந்த சைவப் பெருமாட்டி நம் மங்கையர்க்கரசியேயாகும். ஆதலால் அறிஞர்களே தாய்மார்களே நாம் அடையவேண்டிய சாதனம் திருநீறேயாகும். சமணர்கள் எங்கேயோ ஓரிடத்திலிருப்பதாக எண்ணவேண்டாம். நம்மவர்களுள் திருநீற்றுக்காப்பில்லாதவர்களே சமணர்கள் ஆவது.

திலகவதியாருடைய நிலைமை யாம் குடிவாழ்க்கையாளரைப் பார்ப்போம், அவர்கள் புகழனாருக்கும் மாதினியாருக்கும் மகளாயும், மருள்நீக்கியாராம் திருநாவுக்கரசர் பெருமானுக்குத் தமக்கையாக அவதரித்தவர். இவர் பெற்றோர் இவருக்கு வாழ்க்கைக் குறிக்கொண்டிருந்த கலிப்பகையார் போர் முனையில் இறந்த செய்தி கேட்டுத் தானும் இறக்கத் துணிந்தார்; அப்போது [illegible] மருணீக்கியார் தாயும் தந்தையும் இறந்த உங்கள் திருவடி அடியேனை ஆதரிக்குமென்று இருந்த என்னைவிட்டு நீங்கள் இறக்கத் துணிந்தால் யான் உமக்குமுன் இறப்பேன் என்று தெரிவித்தவுடனே, சைவமும் தமிழும் விளக்கவும், திருத்தொண்டு விளக்கவும் அவதரித்த திருநாவுக்கரசராம், தம்பியர் உளராக வேண்டுமென வைத்த தயா

"உம்பர் உலகணையவுறு நிலைவிலக்க
உயிர்தாங்கி
அம்பொன் மணிநூல் தாங்காது
அனைத்துயிர்க்கும் அருள் தாங்கி
இம்பர்மனை தவம்புரிந்து திலகவதியார்
இருந்தார்."

பின் மருணீக்கியார் மெய்ச்சமயமாகிய சைவசமயம் விட்டு, சமய ஆராய்ச்சியிற்புகுந்து ஊழ்வினையின் பயனாக சமண் சமயம் புகுந்த நிலைமை கேட்டுத் திலகவதியார் வீரட்டானேசுவரரை வேண்ட, அவர் திலகவதியார் வேண்டுகோளுக்கிரங்கிச் சூலை நோய் கொடுக்க, மருள்நீக்கியார் தமக்கையாரிடம் வந்து அவர் திருக்கையால் [illegible] திருவெண்ணீற்றால் சூலைநீங்கப் பின் பல தொண்டுகள் செய்து திவ்ய பாடல்கள் பாடி, பல அற்புதங்கள் செய்து சைவ உலகத்திற்குத் தொண்டு கிரப்பிக் காட்டிய தூய உடலும் உள்ளமுமாக, இறப்பப் பிறப்பை அறவே ஒழித்து இறைவனுடைய சாயுச்சிய பதவியை அடைவதற்குத் தூண்டுகோலாக இருந்தவர் நம் சைவ நாட்டுத் தாய்மணியாம் திலகவதியாரே ஆவார், ஆதலால் இவருடைய வாழ்க்கையிலிருந்து அடையவேண்டிய மார்க்கம், விதவாவிவாகம் புனர்விவாகம் என்ற ஒழுங்கீனமான தீய ஒழுக்கத்தை அறவே ஒழித்தலாம். அவர்களுக்கு மணமான் இவனை தருகுதியென்று பேசிமுர்களையொழிய மணம் ஆகவில்லை. இருந்தும் மணமகன இறந்தான அவனே என் கணவன் ஆக அவன் இறக்க நாம இறப்பது, இல்லையேல் இறைவனை வழிபட்டுத் தூயராகவேண்டும் என்ற தெய்வ சட்டமே [illegible]. அன்பர்களே, தாய்மார்களே, நாமும் அப்படியே [illegible] பெண்களும் [illegible] வேண்டிய என்பது [illegible]

தொடர்ச்சி ௪-ம் பக்கம்

# தமிழுரிமை

"தமிழ்த்தாசன்"

எமதன்னை முதலாக நம்முன் னோரும்
நாடதனிற் பேசியதுந் தமிழே யன்றோ
எமதன்னை மடிகிடத்திச் சுரந்த பாலை
எமதுயிருக் கின்பமுட னீந்த வேளை
தமதரிய வதனமதால் முத்தங் கந்து
சாலாட்டி வளர்த்தமொழி தமிழே யன்றோ
எமதரிய மழலைமொழி யிளமை தோய
இன்னிலத்துப் பேசியதுந் தமிழே யன்றோ. 1

அன்றமத லன்னையொடுந் தங்கை யோடும்
அளப்பரிய வடன்பிறந்தா ரயலா ரோடும்
நின்றவரும் மனைவியொடும் மக்க ளோடும்
நிலவுறையும் நாட்டிலுளோர் தங்க ளோடும்
துன்றவரும் வரையுரைப்போந் தமிழே யன்றோ
தொடர்ந்துவரு மிளமையெனும் சிறப்பும் ஓங்க
வென்றுவரும் சுவையளிக்கும் விண்ணின் மேலாய்
விளங்குமொழி யெமக்குரிமை தமிழே யன்றோ 2

நாம்துயிலும் போதுங்கண் சாலும் போதும்
நம்மைவிட்டு அகலாது நன்கு தோன்றித்
தாம்துயிலா இன்பமொழி யருவாய்க் கூடித்
தனித்துவரு மொழியதுவும் தமிழே யன்றோ
யாம்திகழ வின்னிசையுங் கீதங் காட்டி
யாழாதமை நலகளிக்கு மிம்மை யப்பால்
தாம்திகழ வுடலுயிருக் கின்ப மூட்டும்
தமிழதனைத் தாயெனவே போற்று வோமே. 3

ஆங்கிலமும் சிங்களமும் ஆய்ந்து கொண்டு
அடிமையெனும் வாழ்க்கையதி லாயுட் காலம்
தேங்கியமிழ் நுண்ணறிவோர் சில்லோ ரின்று
செந்தமிழின் பிறப்பரிமை சிந்தி யாது
ஆங்கிலத்திற் சிங்களத்தி லதிலும் பாதி
யாக்கி,தமிழ் மொழிபகர்வா ரறிவி ரக்கோ
ஓங்கியெழு மின்றமிழ்த்தாய்க் கூற்ற வன்போல்
உலகுறைவர் மாவுகவி யிது'வா அந்தோ! 4

அன்னையவள் பசிப்பிணியி லருகு வாட
அயலவருக் கன்னமது அளித்தல் நன்றோ?
முன்னையவள் செந்தமிழா ளின்பத் தன்னை
முழுகவும் தந்தினிது முலைக்கச் செய்தாள்
அன்னவளைப் போற்றுது அடிமை சேர்க்கும்
ஆங்கிலத்தைப் பிறபதத்தை யறிந்து கொண்டு
பின்னுமவள் நலமறியா பெற்ற பிள்ளை
பெரிதுதமிழ் மக்களெனப் பேச லாமோ? 5

முத்தமிழர் ஆண்டருள வீற்ற அன்னை
முழுதுகலை முத்தமிழிற் றோய்ந்த அன்னை
சித்தமது பாவலரை யீன்ற அன்னை
நீடுபுகழ் பெருமையெலாம் பூண்ட அன்னை
சத்திதரும் பண்பலவுந் தாங்கும் அன்னை
சந்ததமு மெமழுதியோர் தவழ்ந்த அன்னை
இத்தரையி லெங்களுக்கு மவளே அன்னை
இன்மகவுத் தமிழர்களே யெழுவி ரின்றே. 6

அன்புதரு மின்றமிழை நன்கு ஆய்ந்து
ஆவனவும தமிழ்க்கொண்டு பலவு மாற்றி
இன்புதரு மன்னையவட் கினிது கூறி
இருநிலத்துச் செந்தமிழும் வாழ வேண்டும்
தென்புதரு மவள்நலத்தைச் சேர வேண்டும்
தேசியத்திற் றமிழதுவும் விளக்க வேண்டும்
பொன்னுரையும் பாரதத்து ஆதி யான
புகழுரிமைத் தனித்தமிழைப் போற்று வோமே. 7

# சேக்கிழார் கண்ட சைவப்பெருமாட்டிகள்

3-ம் பக்கத் தொடர்ச்சி

சைவப் பெண்மணியாம் திலகவதியார் வழங்கியதேயாகும்.

இனி, புனிதவதியாரைக் காண்போம். அவர் காரைக்காலில் தனதத்தச் செட்டியாருக்குத் தவமகளாய்ப் பிறந்து தத்தித் தடக்கும் பிராயத்திலேயே காதல் ததும்ப இறைவனுடைய திருநாமத்தைப் பயின்று மங்கைப் பருவம் அடைந்து நாகபட்டினம் நிதிபதிச் செட்டியாருடைய மகன் பரமதத்தச் செட்டியாருடைய வாழ்க்கைத் துணைநலமாக வதிந்து அடியார் பூஜை, அரன் பூஜை, கணவன் பூஜை இவைகளிற் சிறந்து விளங்கும் நாளில், மாம்பழச் சரித்திரம் நடந்தது. இதனைச் சரித்திரத்திற் காண்க. ஒரு பழத்திற்கு இருபழம் இறைவனைக் கேட்டுப் பெற்ற செய்தற்கரிய செய்கையைக் கண்டு, இது உலக மகள் தோற்றத்திலுள்ள பெண் அல்ல. தெய்வப் பெண்ணென்று தொடர்பு நீங்கி வேறூர் சென்று திருமணஞ் செய்துகொண்டு ஓர் பெண் மகவைப் பெற்று, பெற்றபுகலை தான் கண்ட தெய்வப் பெண்ணின் திருநாமம் இட்டு வாழ்கின்றதைக் கேட்டு அறிந்து பெற்றோர் புனிதவதியாரை யழைத்துச் செல்ல, அவர் வரவைக் கேள்வியுற்ற பரமதத்தன் தனது இளைய மனைவியும் குழந்தையுமாக வந்து மருண்டு நின்ற புனிதவதியார் திருவடியில் விழுந்து, யான் உமதருளால் வாழ்வேன், இவ்விளங் குழவி தானும் உமது நாமம் என்றான் என்று படி விழுந்தான். இதைக்கண்டு அம்மையார் காயகன் கொண்ட குறிப்பை உணர்ந்து இவருக்காகத் தாங்கிய வனப்பு நீங்கிப் பேயுருவை இறைவனை இரைஞ்சிப் பெற்றார். பின் பல தலங் கண்டு கயிலாய மலையாற் சென்று அம்மையார்க்கு இறைவன் அம்மையேயென் றழைக்க அம்மையும் அப்பனேயென்று அழைத்து அப்பனை வணங்க அப்பன் யாது வேண்டுமென்று கேட்க, அம்மை

"இறவாத இன்ப அன்பு வேண்டிப்
பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும், மீண்டும்
பிறப்புண்டேல் உன்னை
யென்றும் மறவாமை வேண்டும்,
இன்னும் வேண்டும் நான் மகிழ்ந்து பாடி
அறவா நீ ஆடும்போது உன் அடியின்
கீழ் இருக்க" என்றார்.

இப்படி வேண்ட, அப்படியே ஆண்டவன், வேண்டுவார் வேண்டுவன ஈவான் ஆதலால் இக்கருத்து பூலோகத்தில் திருவாலங்காட்டில் அடையலாம் என்று சொல்ல அவ்வாறே அம்மையார் திருவாலங்காடு வந்து, ஆண்டவன் ஆட தான் பாடி மகிழ்ந்து இன்றும் பூத உடம்புடன், புகழ் உடம்புடன் இருக்கின்றார் என்றால், நம்முடைய சைவப்பெருமக்களுக்கு என்ன வேண்டும்? ஒரு பெண்மணி நம்மைப்போன்று நிலவுலகிற் பிறந்து உலக வாசனையில் வளர்ந்து, இறைவனோடு இன்றும் பேசிக்கொண்டிருக்கின்றார் என்றால், நம் தாய்நாட்டிற்கு இன்னும் என்ன வேண்டும்? அறிஞர்களே, தாய்மார்களே, நாம் உய்ய வேண்டுமானால், சேக்கிழார் கண்ட சைவப் பெருமாட்டிகளின் தூய நல்ல ஒருபோதும் மறக்கக்கூடாது என்பதை அச்சமுற்றுவது. ஆகவே சேக்கிழார் பெருமான் திருத்தொண்டத் தொகையில் இவர்களைச் சேர்த்திருக்கிறார். அம்பலவாணர் அருட் திறத்தால். இச்சரித்திரங்களை முறையே ஒவ்வொருநாளாய் ஒவ்வொரு சரித்திரம் தனிப்படப் பேசும்

பேச்சை மூன்றையும் ஒரேநாளில் 1½ மணி நேரமாகவும் பேசியிட்டேனென்று முடிக்கக் கொண்டதற்குத் தேன். பிழை பொறுக்க.

# கொல்லாமை

இ. ஆ. கோவிந்தபிள்ளை

"கொல்லா விரதங் குவலயமெல்லா
மோங்க
எல்லார்க்குஞ் சொல்லுவதென்
னிச்சை பராபரமே"

என்பது தாயுமானப் பெருந்தகையாரது திருவாக்கு, இக் கண்ணியில் கொல்லாமை ஒரு சிறந்தவிரதம் என்பதும், அவ்விரதம் உலகெலாம் பரந்தோங்கவேண்டும் என்பதும், அதனை எல்லார்க்கும் எடுத்துச்சொல்லவேண்டும் என்பது தம் இச்சை என்பதும் போதரத் தாயுமான அடிகள் கூறிப் போந்துள்ள வார்த்தைகள் அவதானிக்கத்தக்கன. 'கொல்லா விரதம் குவலயமெல்லா மோங்க' என்று கூறியமையாது அதனை 'எல்லார்க்கும் சொல்லுவதென் இச்சை பராபரமே' என்று சொல்லிப் போந்தமையால் உயிர்கள்மீது அப் பெருந்தகையார் கொண்ட பேரிரக்கம் நன்கு புலப்படுதல் காண்க. இத்தகைய பெரியாருடைய இச்சையை—கருணையோடு கூடிய விருப்பத்தை—நாமும் நினைவு கூர்தல் பொருத்தமுடைய தன்றோ? சைவர்களிற் பலர் சோமவார விரதமென்றும், வெள்ளிக்கிழமை விரதமென்றும், கந்தசஷ்டி விரதமென்றும் என்றின்னோரன்ன எத்தனையோ பல விரதங்களை அநுஷ்டிக்கின்றனர். அவர்களிற் பலர் மாமிச பக்ஷணிகளாகவும் இருக்கின்றனர். அவர்கள் இவ்விரதங்களை அநுஷ்டிக்குங் காலங்களில் மாத்திரம் அம் மாமிசபக்ஷணத்தை நிறுத்துகின்றனர். அங்ஙனம் சின்னாட்களுக்கேனும் தீமையென்று கண்டு நிறுத்தும் அவர் வாழ்க்கை முழுவதிலுமே அதை நிறுத்திவிடின் எத்துணைச் சிறந்தது என்று சிந்திக்கலாமே! பாரதமபாடிய பெருந்தேவனார் ஓர் அழகிய வெண்பாவில் எவ்வறமும் கொல்லா அறத்துள் அடங்குமென்று கூறுவர்.

"ஆனை யடியில் அடங்கா அடியில்லை
யானதுபோல் நிற்கின்றதன்மைதான் —ஊனுயிரைக்
கொல்லா வறத்தின் கொழுநிழற்கே
யுள்ளடங்கு
மெல்லா வறமும் இசைந்து"

என்னும் இவ்வெண்பாவிற் கூறப்பட்டுள்ள கருத்து எத்துணை உண்மையாய்ந்தது.

அறவினை யாது? என்ற கடாவுக்கு விடைகூறவந்த வள்ளுவப் பெருந்தகையார் கொல்லாமையே அறவினை என்றார். அவ்வளவோடமையாது "கோறல் பிறவினை யெல்லாந்தரும்" என்று கொல்லுதலின் தீமையையுந் தெரித்துச் சொல்வாராயினர். கொல்லாமை அறவினை என்று மாத்திரஞ் சொல்லியமையாது, அதுவே நல்லாறெனப்படுவதும் என்று மற்றொரு குறளிற் கூறுவாராயினர். அதனாற்றான்,

"தன்னுயிர் நீப்பினுஞ் செய்யற்க
தானபிறி
தின்னுயிர் நீக்கும் வினை"

என்று உறுதியாக அவர் உபதேசிப்பாராயினர். தன்னுயிரை விடநேர்ந்தாலுங் கூடப் பிறிதொன்றன் உயிரை நீக்கும் வினையை மேற்கொள்ளற்க என்று அவர் சொல்லுவாரானால், அம்மம்ம! ஆலயங்களிலே வாணிகத்தின் பொருட்டும், தன் ஊன் பெருக்கற் பொருட்டும், மதுவுண்டு மாமிசமுண்டு களியாட்டயர்தற் பொருட்டும் நாளும் கொழுத்துவளர்க்கும் உய்தியுண்டோ? அம்மா என்று அழும் கோழியும் அலற அவை படுந் துன்பத்தைச் சிறிதும் பொருட்படுத்தாமல் கன்னெஞ்சம் படைத்த அமைவுள்ளத்தோடு துடிக்கப் பதைக்க அவற்றைக்கொல்லுமவர்க்குக் கழுவாயுண்டோ! ஆசவும் அனைத்துயிர்க்கும் அன்னையாகிய ஆண்டவன் ஆலயத்தின் திருமுன்னிலையில் செய்வதைப்போன்ற இழிதகைமை அராசகம் பிறிதொன்றுண்டுகொல்!

'எவ்வுயிரும் பராபரன் சந்நிதியதாம்

இலங்குமுயி ருடலனைத்து மீசன்
கோயில்'

என்று சைவநூல்கள் கூறவும் அதனை நாளும் படித்துணர்ந்த பின்னும்,

"எவ்வுயிரும் எம்முயிர்போ லென்று
நோக்கி
யிரங்காது கொன்றருந்து மிழிவிலேனை
ரை"

நாம் என்னென்பது! அதுவும் கோயிலுக்குமுன் கொல்பவரை என்னென்பது! இதனாலேதான் போலும் தாயுமானப் பெருந்தகையாரும்,

"கொல்லா விரதமொன்று
கொண்டவரே நல்லோர்"

என்று கூறியவர் அப்பால் மற்றல்லாதார் எத்தகையரோ என்று சிந்தித்துப் பார்த்து அவர்தம இழிதகைமை சொல்லுக் கடங்காது எனக் கண்டு அவரைப்பற்றிப் பேசவும் மனமில்லை என்ற கருத்துடையவராய்,

"அல்லாதார் யாரோ
அறியேன் பராபரமே"

என்று கூறிப் போவாராயினர்.

'அவிசொரிந் தாயிரம் வேட்டலி
னொன்றன்
உயிர்செகுத் துண்ணாமை நன்று"

என்ற தமிழ்மறையின் கருத்தை இவர் உணர்கிலர்போலும்! இத்தகைய இழிதகைமை புரிந்தொழுகும் இன்னோரிற் பலர் தாம் சாதிக்காரரென்று கூறிக்குலமும் கலமும் பேசிக் கொக்கரிப்பதையும் நாம் காண்கின்றோம். என்னே இவர்தம் மடமை! இன்னோரை நோக்கித்தான் போலும் புலவர் ஒருவர் தாம் பாடிய தனிப்பாடல்களொன்றில்

"புலையெனும் புலைதிரப்
புனலென்னும் புனல் மூழ்கி
யலைகின்ற மழுமூட ரறிவென்ன
வறிவென்ன
புலையனறன் மலமண்ணு மெமை
யுண்ணும் பலையர்க்குக்
குலமென்ன கலமென்ன
கூகூ வென் றனகோழி"

என்றழகாகப் பாடிவைத்துள்ளார்.

ஒன்றன் உயிரை ஆக்க முடியாத ஒருவனுக்கு அதனைப் போக்குதற்கு என்ன உரிமையுண்டு? என்ற சேட்டார் புத்தர். ஆகவே, இக்கொல்லாமை நீங்கவேண்டும் என்ற பெரியோரெல்லாம் கூறியவைமையை நினைவுகூர்ந்து அதனை எல்லோருக்குஞ் சொல்லுவதிலும் ஞாபகமூட்டுவதிலும் நாம் பெருமித முடையோமாக. ஆலயங்களில் ஆடு கோழிகளைப் பலியிடுதலாகிய கொடிய செயலைத் தடுக்க முயல்பவரது நன்முயற்சி ஓங்குவதாக.

வியாபாரத்திற்கழகு
விளம்பரஞ் செய்தல்

# திருச்சி ரேடியோ நிகழ்ச்சி

## சனி ஏப்ரல் 27

காலை 7-30: கிராமம் 7-20 தமிழில் செய்திகள் 7.30 கே வி ஐயராமையர் வயலின் 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8.15 ராமநாதபுரம் தேவகுஞ்சரி ரத்னம்மாள் பாட்டு 8 30 காலை இசை 9 முடிவு.

1 கே வி ஐயராமய்யர் வயலின் 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 இசை வகை 2 தமிழில் செய்திகள் 2-05 காஞ்சிபுரம் எம் என் வெங்கடவரதன் பாட்டு 2.30 முடிவு.

மாலை: 5 காஞ்சிபுரம் என் எம் வெங்கடவரதன் பாட்டு 5.40 திருவிளையாடல் புராண விளக்கம் 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6.10 அறிவிப்புகள் வானிலை 6.15 ராமநாதபுரம் தேவகுஞ்சரி, ரத்தினம்மாள் பாட்டு 6-30 மாலை இசை 6-45 கிராம நிகழ்ச்சிகள் 7.15 எல்லோருக்கும் இலவச வைத்திய உதவி 7-30 தமிழில் செய்திகள் 7-45 டி ஆர் மஹாலிங்கம் புல்லாங்குழல் 9.15 ஆங்கிலத்தில் செய்திகள் 9.30 லண்டனிலிருந்து செய்திகள் 10 இசைவேளை 10 30 முடிவு.

## ஞாயிறு ஏப்ரல் 28

காலை 7-15 கிராமம் 7-20 தமிழில் செய்திகள் 7-30 பரூர் கே ராதாமணி பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8-15 காஞ்சிபுரம் டி பச்சயப்பா பாட்டு 8-30 இசைக்கதம்பம் பாட்டு 9 முடிவு.

12 கோகுலம் 12.30 ஓவியலர் 1.30 ஆங்கிலத்தில் செய்திகள் 1.40 மாதர் பக்கம் 2 தமிழில் செய்திகள் 2.05 கோடைக் கல்வி 2.30 முடிவு.

மாலை 5 காஞ்சிபுரம் டி பச்சயப்பா பாட்டு 5.40 தேவாராதனை 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6-10 அறிவிப்புகள் வானிலை 6.15 பரூர் கே ராதாமணி பாட்டு 6.45 கிராம நிகழ்ச்சிகள் 7.15 அன்னத் தவேஷம் 7 30 தமிழில் செய்திகள் 7.45 வத்சலாஹரணம் 9 ரேடியோ நாடக இசை 9-15 ஆங்கிலத்தில் செய்திகள் 9.30 லண்டனிலிருந்து செய்திகள் 9.40 அறிவிப்புகள் வானிலை 9.45 டி வி கிருஷ்ண மூர்த்தி பாட்டு 10 இசைவேளை 10-30 முடிவு.

## திங்கள் ஏப்ரல் 29

காலை: 7.15 கிராமம் 7-20 தமிழில் செய்திகள் 7.30 திருமெய்ஞானம் ஏ ஷண்முகசுந்தரம் பிள்ளை நாகஸ்வரம் 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8.15 திருவாவடுதுறை இசைத்தொகுப்பு 8-30 கே சாரதாமணி பாட்டு 9 முடிவு.

1 கதம்பம் 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 கே சாரதாமணி பாட்டு 2 தமிழில் செய்திகள் 2-05 கோடைக்கல்வி 2-30 முடிவு.

மாலை 5 திருமெய்ஞானம் ஏ ஷண்முகசுந்தரம்பிள்ளை நாகஸ்வரம் 5-40 இசைப் பயிற்சி 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6.10 அறிவிப்புகள் வானிலை 6-15 திரைகானம் 6.45 கிராம நிகழ்ச்சிகள் 7-15 நகரவாழ்வு 7.30 தமிழில் செய்திகள் 7-45 திருப்பாம்பரம் என் சுவாமிநாதபிள்ளை புல்லாங்குழல் 9.15 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9.40 அறிவிப்புகள் வானிலை 9-45 திரைகானம் 10 30 முடிவு.

## செவ்வாய் ஏப்ரல் 30

காலை 7-15 கிராமம் 7.20 தமிழில் செய்திகள் 7-30 டி வி சிவசிதம்பரஐயர் புல்லாங்குழல் 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8-15 சூடாமணி 8.30 வி கங்காதரம்பிள்ளை பாட்டு 9 முடிவு.

1 கதம்பம் 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1.40 டி வி சிவசிதம்பரஐயர் புல்லாங்குழல் 2 தமிழில் செய்திகள் 2-05 கோடைக் கல்வி 2-30 முடிவு.

மாலை 5 திருவழுந்தூர் ஏ கே கணேசபிள்ளை பாட்டு 5-40 இசைப் பயிற்சி 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6.10 அறிவிப்புகள் வானிலை 6.15 பரூர் பி வி பொன்னம்மா பாட்டு 6.30 திரைகானம் 6.45 கிராம நிகழ்ச்சிகள் 7.15 கிராம அமைப்பு 7-30 தமிழில் செய்திகள் 7-45 சுயம்வரமண்டபத்தில் 8 பரூர் பி வி பொன்னம்மா பாட்டு 8.45 திருவழுந்தூர் ஏ கணேசபிள்ளை பாட்டு 9-15 ஆங்கிலத்தில் செய்திகள் 9.30 லண்டனிலிருந்து செய்திகள் 9-40 அறிவிப்புகள் வானிலை 9-45 தர்மபுரி சுப்பராயர் ஜாவளிகள் 10 நீங்கள் கேட்டவை 10-30 முடிவு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உலகம்பலவிதக் கதை

2ம் பக்கத் தொடர்ச்சி

நிலையிலேதான் நான் இருக்கிறேன்" எனக் கவலையோடு சொன்னான் விசுவநாதன்; விசாலாட்சி தன் அழகிய முகத்திலே புன்னகையரும்ப அவனைப்பார்த்து "உங்களிடத்திற் பெண்துணையில்லையா" என்று வினவ, "இருந்தால் இப்படியெல்லாம் ஏன் யோசிக்கின்றேன்" என்று விசுவநாதன் பதில் சொல்ல, அவள் "உங்கள் செயலைப் பார்த்தால் வெண்ணெய் வைத்துக்கொண்டு நெய் தேடுவார் செயல் போலல்லவா இருக்கிறது' உங்களுக்கு வாய்த்த பெண்துணை நான் என்று சொல்ல உங்களுக்கு வெட்கமாயிருக்கிறதோ? ஒருபோது என்னைக்காட்டிலும் அதிக வாய்ப்புள்ள பெண்துணை வேறு யாருமுண்டோ" என்று சொல்லிச் சிறிது ஊடினாள்; "கோபிக்க வேண்டாம் என் கண்ணே; நான் உம்மைப் பெண் துணையென்று எண்ணவில்லை; நீர் எனக்கு நாயகி யென்றல்லவா மதித்திருக்கிறேன்" எனச் சமயோசிதமாகச் சொல்லி அவளைச் சமாதானப்படுத்தினான் விசுவநாதன்; "ஆண்பாலாராகிய உங்களுடன் பெண் பேதைகளாகிய நாங்கள் ஞாயம் பேச முடியுமா? நான் பேசத் துணிந்தமை பிழை" என்று ஆர்வம்பெருகப் பேசி அவனை மகிழ்வித்தாள் விசாலாட்சி; "என் அன்பிற்குரியாளே. இப்பொழுது அந்த இருவரையும் ஊருக்கு அனுப்பிவைக்கும் விஷயத்தில் நான் என்ன செய்யவேண்டுமென்பதை நீயே சொல்லலாமே; நீயும் உடன் வருவாயானால் நாங்கள் இருவேமும் அவர்களிருவருக்கும் துணையாகப் புறப்பட்டுச் சென்று தென்னிந்திய நாட்டிலுள்ள விசேஷங்களையும் பார்த்துக்கொண்டு, இயலுமானால் எங்கள் சமூகத்திலேயே அவர்களுடைய விவாகத்தையும் நிறைவேறச்செய்து சந்தோஷமாக மீண்டுவரலாமே; அது உனக்குஞ் சம்மதந்தானா" என்று விசுவநாதன் கேட்க, "உங்கள் சம்மதத்தைவிட வேறாக எனக்கும் ஒரு சம்மதம் உண்டா? இல்லையே; அப்படியே செய்வோம்" என்றாள் விசாலாட்சி.

### "இப்பொழுதாயினும் அந்தரங்கத்தைச் சொல்லவேண்டும்"

இவை இங்ஙனமாக, இராமச்சந்திரனுக்கு ஏதும் ஆகாரம் வழங்கும்படி அறையுட் சென்ற இரஞ்சிதம் அங்கு வைக்கப்பட்ட பழங்களிற் சிலவற்றை அவன் உண்ணும்படி அன்புடன் பரிமாறி அயலில் விநயமாக நின்றாள்; அவற்றை உண்ணத் தொடங்கிய இராமச்சந்திரன் இரஞ்சிதத்தைப் பார்த்தபோது அவளுடைய கண்களில் நீர் ததும்புவதை அவதானித்தான்; அவன் அருந்துவதை விடுத்து மனம் பதைப்ப "இரஞ்சிதம், கவலை எதற்காக? மகிழ்ச்சியடையவேண்டிய நேரத்திலா கவலைப்படுவது; ஏதோ ஆண்டவனருளால் உம்மைத் தேடிக் கண்டுகொண்டேன்; ஊர்விட்டுத் தேசம்விட்டு உற்றார் பெற்றாரை விட்டுத் தன்னந்தனியே இங்கு வந்தீரென்பது நிசமெனினும், நீர் மிகவும் மேலான நிலைமையில் இருக்கின்றீர்; ஊரிலேயிருந்தாலும் இவ்வளவு பெருமையையும் மதிப்பையும் அடைந்திருக்கமாட்டீர்; நான் இந்தவூரில் வந்து தங்கிச் சில மாசங்களாயின; உம்மைப்பற்றி நான் கேள்விப்பட்டவெல்லாம் நன்மையேயன்றித் தீமை ஏதுமில்லை; இப்பொழுதாயினும் எனக்கு அந்தரங்கத்தைச் சொல்லவேண்டும்; துறவிடம்மாளும் நீரும் ஒருவர்தாமே" என்று அவளுடன் கேட்டான்; "ஆம்; நான்தான்" என்று இரஞ்சிதம் நிலத்தைப் பார்த்தவண்ணஞ் சொல்ல, "அப்படித்தான் நானும் முந்தி அயிர்த்திருந்தேன்" எல்லாம் இறைவன் செயல்; ஒருபொல்லாங்குமில்லை; எதற்கும் கவலைப்படவேண்டாம்" என்று தேறுதல் சொல்லி அவன் பழத்தையருந்த இரஞ்சிதம் தன் கவலை மாறப்பெற்றாளாய், முகமலர்ச்சியோடு அவனுக்குப் பருகும்வண்ணம் பாலை வழங்க அவன் ஏற்று உட்கொண்டான்; புறத்தே வந்து கைகால் சுத்திசெய்துகொண்டு தலைவாசற்பக்கம் வருதலும், விசுவநாதனும் விசாலாட்சியும் அவனை உபசரித்து ஆசனத்தில் இருக்கச்செய்தனர்; இரஞ்சிதமும் வந்து விசாலாட்சிக்கயலே நின்றாள். இங்ஙமாக இராமச்சந்திரன் தான் மடத்திற்கு மீண்டு போவதற்குத் தனக்கு அநுமதி தரும்படி கேட்க, விசுவநாதனும் விசாலாட்சியும் விடை கொடுத்தனர்; "உங்களுக்குச்சிரமத்தையாக்குகிறோமென்றெண்ணவொண்ணாது; இங்கும் இடையிடையே வந்துபோக வேண்டுமென உங்களைக் கேட்டுக் கொள்ளுகிறோம்" என்றாள் விசாலாட்சி; "அம்மா, உங்கள் கட்டளைப்படி செய்வேன்" என்றான் இராமச்சந்திரன்; "அந்த இளந் துறவியம்மாள் போசனத்தின்பொருட்டு மடத்தில் என்னை எதிர்பார்த்தவண்ணம் இருத்தல்கூடும்; ஆனதால் எனக்குப் போய்வர உத்தரவு தரல்வேண்டும்" என்று இராமச்சந்திரன் இரஞ்சிதத்திடம் தெரிவிக்க, இரஞ்சிதம் புன்முறுவலரும்ப "சுகமே சென்று நாளைக்குத் தவறாமல் வாருங்கள்" என்று அன்புடன் விடை கொடுத்தனுப்பினாள்; இராமச்சந்திரனும் தன் மனசிலே பல்வகையான சிந்தனைகள் மாறிமாறி நிகழத் தான் வசிக்கும் மடத்திற்கு மீண்டு செல்வானாயினன்.

(வரும்)

## யான் கண்ட தீவுப்பகுதித் தமிழாசிரியர் சங்க வருடாந்த விழா

பண்டிதர் மா. மாணிக்கம்

இவ்விழா 15-4-46 முதல் 17-4-46 வரை நடைபெற்றது. இந்த மூன்று நாள்களும் என்றும் மறக்கமுடியாதனவாகும். இவ்விழாவிலே, தமிழ் ஆசிரியர்கள் முன்னேற்றப் பாதையில் சென்றுகொண்டிருக்கிறார்கள் என்பதைக் கண்டேன். இந்நிகழ்ச்சி நடைபெற்ற இடம் ஆராய்ச்சிமணம் வீசும் மண்டபமாகக் காணப்பட்டது. பல சிறந்த ஆராய்ச்சியாளர்கள் விரிவுரை நிகழ்த்தினர். பூமிசாஸ்திரம் படிப்பிக்கும்முறை, எண்பயிற்றும் வழி, பாலரைப்பயிற்றுவதில் அவதானிக்க வேண்டியன, பாடசாலையும் சமூகமும், பரீட்சித்தலும் புள்ளியிடுதலும், மாணவர் வகுப்பில் குறைவான தேர்ச்சி காட்டுவதன் காரணமும் அவற்றை நீக்கும் வழியும் என்பனபோன்ற, ஆசிரியருக்குரிய ஆசிரியத் தொழிலுக்கே உதவியான விரிவுரைகளையெல்லாம் சபையைக் கவரத்தக்க பேராற்றல் வாய்ந்தவர்களால் சொற்பொழிவாற்றப்பட்டமை மிகவும் சிறந்த அம்சமாகும். 'றிப்ரெசெல் கோஸ்' என்று ஆங்கிலத்திலே சொல்வதற்குரிய கருத்தை யான் அங்கு கண்டேன். யான் அறிந்த படிப்பித்தல் முறைகள் எல்லாம் அவ்விரிவுரைகளால் மினுக்கப்பட்டன. எனக்கு மாத்திரமன்று அங்கு வந்துள்ள அனைவரும் தம் அறிவைப் புதுக்கியும் சேர்த்துமிருப்பார்கள் என்பதில் ஐயமின்று. இந்த இடத்திலேதான், கூட்டத்திற்குச் சமுகமளிக்காத, புதுமை யுணர்ச்சியைப் பெற வேண்டுமென்ற விருப்பமில்லாத ஆசிரியர்களை நினைக்கவேண்டியிருக்கிறது; இரங்கவேண்டியிருக்கிறது. அந்த மூன்று நாளும் அக்கூட்டம் பேராற்றல் வாய்ந்ததாக, மேன்மை பொருந்தியதாக, அன்பு செறிந்ததாக, புனிதமானதாகக் காணப்பட்டது. இவ்வளவெல்லாம் தமிழ் ஆசிரியர்களிடத்திலே, சுயபாஷா ஆசிரியர்களிடத்திலே மறைந்து கிடந்தனவா என வியப்புற்றேன். இவர்களை இனி அலட்சியம்பண்ண ஒருவராலும் முடியாதென்பதை அறிந்தேன். அதற்கேற்க அக்கூட்டமும் தமிழ் ஆசிரியர்களுக்குச் சம்பளம் உயர்த்தவேண்டுமென்றும், ஆங்கில பாடசாலைக்கும் தமிழ்ப் பாடசாலைக்கும் சராசரி விஷயத்தில் வேறுபாடு காட்டல் கூடாது என்றும் பல தீர்மானங்களை நிறைவேற்றிக் கல்விச்சபைக்கு அனுப்பும் ஒழுங்கினையுஞ் செய்தது.

## வடஇலங்கை ஜவுளிவர்த்தகர் சங்கம்

சென்ற புதன்கிழமை 24-4-46 மாலை 4 மணிக்கு யாழ்ப்பாணம் நகர மண்டபத்தில் ஜவுளிக் கட்டுப்பாட்டதிகாரி கனம் E. றெட்றிக்கோ அவர்கள் தலைமையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில், ஷை சங்கத் தலைவர் S. P. நடராசா அவர்கள் வியாபாரிகளின் தேவைகளைப்பற்றித் திரு றெட்றிக்கோ அவர்களுக்குத் தெரிவித்த விபரம் பின்வருமாறு:-

"இலங்கை, வெளியூர்களில் இருந்துவரும் ஜவுளி வகையிலேயே தங்கியிருப்பதனால், அந்த ஜவுளியை விநியோகிக்கும் முறையில் தங்களுக்கேற்பட்டுள்ள கஷ்டங்களை நாங்கள் உணராமலில்லை. இந்த நிலைமையானது தற்போது உலகில் நிலவும் ஜவுளிப் பஞ்சத்தினால் மேலும் செட்டிருக்கிறது.

ஐக்கியசங்கங்களின் மூலம் ஜவுளி விநியோகம் செய்யும் முறையைக் குறித்து ஒரு குறிப்பு உங்களுக்குரைக்க நாம் விரும்புகிறோம். இம்முறையில் ஜவுளிப் பங்கீடு செய்வது பல கஷ்டங்களையும் பலருக்குப் பலத்த தலைவலியையும் உண்டாக்குகிறது எனச் சொல்வது மிகையாகாது. இதற்குக் காரணம் உங்கள் காரியாலய நடவடிக்கைகள்பிளவுபட்டிருப்பதும் இங்கே இறக்குமதியாகும் ஜவுளிகளில் 100 க்கு 50 வீதத்துக்கே சரியானபடி கணக்கெடுக்கப்படுதலுமே எனக் கூறலாம். ஐக்கியசங்கங்கள் மூலமாக ஜவுளி விநியோகம் செய்யும் முறை ஜனங்களுக்கு உண்மையில் நன்மையாய் முடிந்திருக்கிறதா? இந்த ஐக்கியசங்க இயக்கமென்பதில் இலங்கை வாசிகளுக்கு நம்பிக்கையும் திருப்தியுமிருக்கிறதா? கணக்கெடுத்துப் பார்க்கும் வகையில் இந்த இயக்கம் வெற்றி பெறவில்லையெனப் புலப்படுகிறது. ஐக்கிய சங்கங்கள், அவைகளை ஆதரிக்கும் பொதுமக்களுக்குப் பூரண திருப்தியை அளிக்க வேண்டிய ஸ்தாபனங்கள். ஆனால் அவைகள் அத் திருப்தியை அளிக்கின்றனவோ என்றால், இல்லை. இனிமேல் அளிக்குமோ என்றால், அதுவும் இல்லையென்றே சொல்லவேண்டியிருக்கிறது.

மேற்சொல்லிய குறிப்புகள் தங்களுக்கு மனஸ்தாபத்தை யுண்டுபண்ணுவதானால், எங்களை மன்னிக்கும்படி கோருகிறோம். ஆனால் ஜவுளி விஜயத்தில் மத்திய ஆட்சி ஸ்தாபனத்திற்கு 250 மைலுக் கப்பாலிருக்கும் யாழ்ப்பாணத்தில் ஜவுளி வியாபாரிகளாகிய நாங்கள் வியாபார முறையில் அனுபவிக்கும் இடையூறுகளையும் கஷ்டங்களையும் தெரியச்செய்யும் நோக்கமாகவே மேற்சொல்லிய குறிப்புகளைக் கூறத் துணிந்துளோம்.

யாழ்ப்பாணத்தில் ஜவுளி இறக்குமதி செய்பவரும் மொத்த வியாபாரிகளும் சில்லறை வியாபாரிகளும் செய்துவரும் வியாபாரத்தின்விரிவை நோக்கும்போது, எங்களால் சேர்க்கப்படும் கூப்பன்களை இங்கே கடமையாற்றும் உதவி ஜவுளிக் கட்டுப்பாட்டதிகாரி ஏற்கும்படியான அதிகாரம் வழங்கப்பட வேண்டுமெனக் கேட்டுக் கொள்ளுகிறோம்.

இரண்டாவதாக இங்கே இறக்குமதி செய்யும் துணிகளுக்கு இங்கேயே விலை போடுவதற்கான ஒரு காரியாலயம் ஸ்தாபிக்கப்பட வேண்டும்.

மூன்றாவதாக இப்போது சில்லறை வியாபாரிகளுக்கு விடப்பட்டிருக்கும் 10விகித லாபம் முற்றிலும்போதாது. ஏனெனில் ஒரு சில்லறை வியாபாரி வாரந்தோறும் பெறும் துணியின் தொகை பங்கீடு செய்பவரில் தங்கியிருக்கிறது. உதாரணமாக ஒரு சில்லறை வியாபாரி 500 ரூபாய் பெறுமதியான துணிகளை வாங்கும் அதிர்ஷ்டம் பெற்றால், அதை விற்பதில் அவருக்கு 50 ரூபாய்தான் லாபம்கிடைக்கிறது. இத்தொகை அவர் ஜீவனத்துக்கே போதாது. ஆதலால் அமெரிக்கன் துணிகளுக் கிருப்பதுபோல் இவ்விகிதம் 15 ஆக உயர்த்தப்படல் வேண்டுமெனக் கோருகிறோம்.

நாலாவதாக, தற்காலீக நிலைமையில் சீமையிலிருந்து வரும் துணி வகைகளைச் சில்லறை வியாபாரிகள் கொழும்பில் வாங்கமுடியாமலிருக்கிறது. ஆதலால் இவ்வகை ஜவுளி கொழும்பில் இறக்கப்பட்டவுடன் அவைகளுக்கு விலையிட்டு வியாபாரத்துக்கு விடுமுன் அவைகளில் ஓர் பகுதி யாழ்ப்பாணப் பகுதிக்குப் பங்கீடு செய்யப்படல் வேண்டும். எங்கள் நன்மையைக் கோரி மாத்திரமல்லாமல் யாழ்ப்பாண மக்களுக்கு இவ்வகை ஜவுளி கிடைக்கப்பெறாததினால் அவர்கள் நன்மையையும் கோரியே நாம் இவ்வேண்டுகோளைச் சமர்ப்பிக்கிறோம்.

ஐந்தாவதாக, யாழ்ப்பாணத்தின் ஜனத்தொகையுடன் ஒத்துப்பார்க்கும்போது, யாழ்ப்பாணத்துக்கெனப் பங்கிடு செய்யப்படும் அமெரிக்கன் ஜவுளிவகை முற்றிலும் போதாது. ஆதலால் இந்தவகையில் யாழ்ப்பாணத்தின் ஜனத்தொகைக்கேற்றபடியான ஜவுளிப் பங்கீடு செய்யப்படுதல்வேண்டுமெனக்கோருகிறோம்.

ஆறாவதாக, யாழ்ப்பாணத்துக்கு வரும் கைத்தறி நெசவுச் சேலைகளின் தரத்தைப்பற்றிக் கொஞ்சம் ஆராயும்படி தங்களை வேண்டுகிறோம்; தற்போது இங்கு வரவழைக்கப்படும் சேலைகள் தொழிலாள வகுப்பினர்க்கென்றே வரவழைக்கப்படுகின்றன. 60 க்கு 60, 100 க்கு 100 ரகச்சேலைகளே இங்கு சாதாரணமாகப் பாவிக்கப்படுவன. ஏற்றுமதி செய்யும் நாடுகளில் வைக்கப்பட்டிருக்கும் கட்டுப்பாடுகளால் இச்சேலைகளை வரவழைக்கும் நிலைமை மிகவும் மோசமாக இருக்கிறது ஆதலால் தாங்கள் இந்த விஷயத்தில் கொஞ்சம் சிரத்தை வைத்து இந்திய அதிகாரிகளுடன் ஆலோசனை செய்து எங்களுக்கு இச்சேலைவகையில் ஓரளவுக்காவது போதுமான விகிதம் வரவழைக்க வழிவகை செய்யுமாறு வேண்டுகின்றோம்.

ஏழாவதாக, 4 யார் அல்லது அதற்குக் குறைந்த நீளமுள்ள வேஷ்டி வாங்குவதற்குத் தேவையான 4 புள்ளிகளுக்கும், ஒரு 'சாரம்' வாங்குவதற்குத் தேவையான புள்ளிகளுக்கும் உள்ள தாரதம்மியம் பொருத்தமற்றதாக இருக்கிறது. இலங்கையின் மறு பாகங்களில் வசிக்கும் ஒரு தொழிலாளியின் உடைக்கு (சாரம் அல்லது 'கம்போய்') 2புள்ளிகள் போதுமென்றால், வேஷ்டி பாவிக்கும் ஒருதொழிலாளிக்கு 2 யார் நீளமுள்ள வேஷ்டி வாங்க ஏன் 4 புள்ளிகள் வேண்டியிருக்கிறது என்பது தெரியவில்லை.

மேற் சொல்லப்பட்ட குறிப்புக்களைத் தாங்கள் ஆதரவோடு கவனித்து, எங்கள் குறைகளைத் தீர்ப்பீர்களென்று நம்புகிறோம்."

### அறிவித்தல்

மன்னார் டிஸ்திறிக்கில் உணவுக் கட்டுப்பாட்டுக் காவற்காரர் தேவை.

20 வயதுக்கு மேற்பட்டவர்களும் 40 வயதுக்கு உட்பட்டவர்களுமாய் இருத்தல் வேண்டும். இரண்டு நற்சாட்சிப் பத்திரங்களுடன், மனுப் பத்திரங்கள் மன்னார்க் கச்சேரியில் 1946ம் ஆண்டு மேமாதம் 6ந் திகதி மத்தியானம் 12மணிக்கு முன் சேரவேண்டும்

நாளொன்றுக்குச் சம்பளம் ரூபா 1.25ம் தற்காலிக யுத்த உதவிப் பணமும்.

என். மகாதேவா,
உபஉணவுக் கட்டுப்பாட்டதிகாரிக்காக,
மன்னார்.

மன்னார், 16, சித்திரை, 1946.

G 11 26

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவீன வேலைப்பாடுள்ள

பவுன் நகைகள், வெள்ளி நகைகள், வைர நகைகள், கல்நகைகளுக்கு
நம்பிக்கைக்கும் நாணயத்துக்கும் சிறந்த இடம்

## கந்தையா பெரியதம்பி

நகை வியாபாரி, 509 காங்கேசந்துறை ரேட்
தட்டாதெரு யாழ்ப்பாணம்

Mis 196 7-1 — 7-7 (வெ)



# தந்தரோகசஞ்சீவி

கந்தசாமி வைத்தியர்

## சந்தனாதித் தயிலம்

ஒரு கிழமைக்கு வைக்சக் கூடிய
ஒரு அவுன்சு தயிலம் விலை ரூ. 2.

ஒவ்வொருநாளும் ஒருசதவீதம் வைத்துக் கடைசியன்று சீயாக்காய் வெந்தயம் அவித்துத் தப்பி வென்னீரில் தோய்வது பத்தியம்: புகையிலையாகாது ஆடின பல்லு உடனே இறுகும், மூரசு வளரும் வாய்ப் புண் வீக்கம் தொண்டைப்புண் கம்மல் இருமல் கபாலம் பீனிசம் மாற்றும் உத்தரவாதமுடையது. ஒரு தடவை வேண்டிப் பாவித்து அறியலாம்,

நெருப்புச்சுட்டால் அல்லாமலும் எந்த வேக்காட்டிற்கும் போட உடனே வேதனை தணியும்

வல்வெட்டித்துறை நரசிங்க வைரவ கோவிலிலும் கீழ்க்காணும் இடத்திலும் பெற்றுக்கொள்ளலாம்.

வி. பீ யிலும் அனுப்புவோம்.
சீசா முதலிய செலவு கூடவரும்.

ஆயுள்வேத சிவசோதி
மெடிக்கல் ஹோல்

Mis 27 26-4-46—25-10-46


# தீவுப்பகுதித் தேர்தல்

புதிய அரசியலில் அமைக்கப்படும் அரசாங்கசபையில், தீவுப்பகுதிப் பிரதிநிதியாய் வர நான் முற்பட்டிருக்கிறேன்.

ஆங்கில இந்துசாதன ஆசிரியராக எந்தக் கோள்கையை அநுசரித்தேனே, அதுவே இனியும் எனது அரசியற்கோள்கையாகும்.

**A. V. குலசிங்கம்**

Mis 11 9—30 4


# மலேரியா மஹாரதைதலம்

அனேகர் மலேரியாவால் பீடிக்கப்பட்டு இத்தைலம்பாவித்துச் சுகப்பட்டு இருக்கிறார்கள், காய்ச்சல் இருக்கும் பொழுதும் பயம் இல்லாமல் தைலம் தலைக்கு வார்க்கலாம். 20 வருஷம் அநுபவம் உள்ளது. பதிவுசெய்யப்பட்டது. ஒருமுறை பாவித்துப்பாருங்கள்

| | | |
|---|---|---|
| 6 | அவுன்ஸ் போத்தல் | 5—00 |
| 12 | ,, ,, | 10—00 |
| 24 | ,, ,, | 18—00 |

பொ. செல்லையா,
ஆயுர்வேத வைத்தியர்
கந்தர்மடம், யாழ்ப்பாணம்,

Mis 237 1 3-46—1-3-47 வெ



# புகையிலை தேவை

பெருந்தொகையில் யாழ்ப்பாணப் புகையிலை தரக்கூடியவர்கள், என்ன விலையில், மாதம் எவ்வளவு, தரமுடியும் என்பதைப் பின்வரும் விலாசதாருக்கு எழுதுக: வங்கி மூலமாக உரக்கம் கொடுக்கப்படும்.

**T. N. ரத்தினம்,**
82, அம்பாங்தெரு,
கோலாலம்பூர், மலேயா.

Mis 9 9-4—13-5


# அரசினர் விளம்பரம்

சுதேச வைத்திய கலாசாலை
கோட்டாரேட்டு, கொழும்பு

சுதேச வைத்திய கலாசாலையிற் சேர விரும்புவோர் தங்கள் விண்ணப்பங்களை ஷை கலாசாலை அதிபருக்கு 1946ம் ஆண்டு சித்திரை மாசம் 30ந் திகதிக்கு முன்னர் அனுப்பி வைத்தல் வேண்டும்.

ஷை கலாசாலையிற் சேர விரும்புவோர் கீழ்வரும் பரீக்ஷைகள் ஏதாவதொன்றில் சித்தி யடைந்தவராயிருத்தல் வேண்டும்.

(1) ஆயுள்வேத வகுப்பு
- a. எஸ். எஸ். சி. (சிங்களம்)
- b. எஸ். எஸ். சி. (ஆங்கிலம் சிங்களத்துடன்)
- c. லண்டன் மற்றிக் சிங்களத்துடன்
- d. வித்தியோதய, வித்தியாலங்கார பிரிவேனாவிலினுல் நடத்தப்படும், மத்திய அல்லது மேல்தர பரீட்சைகள்

2) சித்த வைத்திய வகுப்பு
- a எஸ். எஸ். சி. (தமிழ்)
- b எஸ். எஸ் சி (ஆங்கிலம் தமிழுடன்)
- c. லண்டன் மற்றிக் (தமிழுடன்)
- d ஆரிய திராவிட வித்தியா விருத்திச் சங்கத்தினுல் (Oriental Studies Society) நடத்தப்படும், பிரவேச பண்டிதர் அல்லது பண்டிதர் பரீக்ஷைகள்

(3) யூனனி வைத்திய வகுப்பு
- a. ஜே. எஸ். சி ஆங்கிலம் (மகமதியர்களுக்கு மாத்திரம்)
- b எஸ். எஸ். சி. (ஆங்கிலம்)
- c லண்டன் மற்றிக் அல்லது அதற்கு மேற்பட்ட பரீக்ஷைகள்

ஏ. என். என். பணிக்கர்,
அதிபர், சுதேச வைத்திய கலாசாலை
கொட்டா ரேட்டு,
கொழும்பு, 2 4-46

(G 10 23, 26-4-46,


# பசந்த லேகியம்

இதனுல் மூலச்சூடு, இருமல் பித்தப் பாண்டு, குன்மவாய்வு, நெஞ்செரிவு, கைகால் வலி, அசதி, அஜீரணம், வயிற்றுப் பொருமல், புளித்த ஏப்பம், மலச் சிக்கல், பீனிசம், பார்வைக் குறைவு, வெள்ளை, சூலை, சந்து வாய்வு, பிரமேகம் முதலிய வியாதிகள் சூரியனைக் கண்ட பனிபோல் நீங்கும், இந்திரியம் கட்டுப்பட்டு, தேக புஷ்டி, வஜீகரம், பலம் முதலானவை உண்டாகும்.

ஸ்திரீகளுக்குண்டாகும் பிரதானமான வியாதியாகிய சூதகக்கட்டு, பிரசவத்தால் உண்டாகும் பல கொடிய உபத்திரவங்கள் தீர்ந்து மாதவிடாய் குறைந்து அல்லது அதிகமாய்க்காணுதலால்நேரிடும் பல நோய்களும் தீர்ந்து, தேகத்துக்குப்பலம் உண்டாக்கும்.

ஒருருத்தல் விலை ரூபா 25
அரைருத்தலுக்கு ரூபா 12-50
கால்ருத்தல் ரூபா 6-25

விலாசம்:
**க. ஆறுமுகம்பிள்ளை**
நி 156, செக்கடித்தெரு கொழும்பு
(Mis 25 23-4-46 to 22-3-47)



# குடைமுத்திரை மார்க்) ஓடுகள்

நீங்கள் நவமாகக் கட்டியெழுப்பும் கட்டிடங்களுக்கு இன்றியமையாத

## கலிக்கற் ஓடுகள்

இவைகளின் கனம் மிகவும் குறைக்கப்பட்டு, வயிரம் மிகவும் கூட்டப்பட்டிருக்கின்றன. ஆகவே, இவைகளினுல் வேயப்படும் கூரைகளுக்குப் பாரம் மிகக் குறைவாயிருக்கும். இவைகளின் கனத்துடன், இவைகளால்வேயப்பட்டிருக்கும் பரப்பை ஒத்துப்பார்த்தால் விசாலம் மிகவும் அதிகமாய்க் காணப்படும்.

காற்றினுல் உடையாது. மழையினுல் நீர் பொசியாது. மிகவும் கரிசனையாகவும், நுணுநுணுக்கமாகவும் செய்த ஆராய்ச்சியின் பயனுவே இவைகள் தயாரிக்கப்பட்டன.

ஓடுகள் வேண்டுமாயின் எவ்வளவு தேவையென்று எலவே 'ஏசண்டுகளுடன்' தாமதியாது பதிவுசெய்து வைப்பது நன்று. வருகிறவாரம் ஒருகப்பல் ஓடுகள் இறக்குமதி செய்வோம்.

'சோல் ஏஜென்ஸ்'
ஜே. செருபிம் அன் பிறதர்,
பெரியதெரு, யாழ்ப்பாணம்.

Mis 243 B 12-3—12-9 (வெ)





REGD

# கிறைப் - விற் - டி

(GRIPE—VIT—D)

குழந்தைகளுக்கு
ஆரோக்கியத்தைத் தரும்

வயிற்றுவலி, புளிப்புத்தன்மை, உவாந்தி, வாய்வுத்தன்மை, வலி, பல்லரும்பும்போதுள்ள வருத்தம், வயிற்ரோட்டம், விக்கல் முதலிய

குழந்தைகளின் சகலரோகங்களுக்கும்
நிச்சய நிவாரணம்

## கிடைக்கும் இடங்கள்:

கொம்மேஷல் பிறெஸ், டையறம்ஸ், சிற்றி டிஸ்பென்ஸரி, நியூற்றன்ஸ் — பெரியதெரு, யாழ்ப்பாணம்.

ரோயல் பாமேசி, ரோயல் டிஸ்பென்ஸரி, மெடிக்கல் ஹோல், யாழ்ப்பாண ஐக்கியசங்கக் கடை — ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம்.

K. C. தெட்சணாமூர்த்தி, காங்கேசன் துறைரோட், பெரியகடை, யாழ்ப்பாணம்

இலங்கையிற் பிரதம விநியோகஸ்தர்:
**மொடேண் ஏஜென்சீஸ்,**
சிலாபம், (இலங்கை)

185, 31—31-12-46)


# குடிசன மதிப்பெடுத்தோரின் குறை

சமீபத்திற் குடிசன மதிப்பெடுத்த குமாஸ்தாக்கள் ஒவ்வொருவருக்கும் 20 ரூபாயிலிருந்து 25 ரூபாய்வரை கொடுக்க அரசாங்கம் தீர்மானித்தது குறிப்பிட்ட குமாஸ்தாக்கள் அரசாங்கத்தின் இத் தீர்மானத்தைக் குறித்து அதிருப்தி யடைந்திருப்பதாக அறியப்படுகிறது குடிசன மதிப்பெடுப்புப் பகுதி அதிபரை இது விஷயமாகச் சில குமாஸ்தாக்கள் கண்டு பேசியதாகச் சொல்லப்படுகிறது.

முதற் குடிசன மதிப்பெடுப்புக்கு 16 தினங்களுக்கு முன்பிருந்து இரவு வெகுநேரம்வரை தாங்கள் மிகவும் சிரமமெடுத்து உழைத்ததாக அக் குமாஸ்தாக்கள் கூறியிருக்கின்றனர். ஆகவே, தங்களுக்கு நியாயமான வேதனம் அளிக்க வேண்டுமென அவர்கள் கோருவதாக அறியப்படுகிறது.

# விளையாட்டிலும் வெள்ளையரைச் சேர்க்கத் தடை

தென்னுபிரிக்க யூனியன் நிறைவேற்றியிருக்கும் இந்தியர் தடைச் சட்டத்திற்குப் பதில் நடவடிக்கையாக இந்திய 'கிரிக்கெற்கிளப்' தென்னுபிரிக்க வெள்ளையர் யாரையும் தன் அங்கத்தினராகச் சேர்த்துக்கொள்வதில்லையென்று முடிவு செய்திருக்கிறது இம்மாதிரியே வெலிங்ரன் விளையாட்டுக் கழகமும் சமீபத்தில் முடிவு செய்ததென்பது குறிப்பிடத் தக்கது.


உலகப் பிரசித்திபெற்ற

# கமலா சர்க்கஸ்

திறமை வாய்ந்த நிபுணர்களாகிய
ஆண்களும் பெண்களும்
3 பயங்கரமான சிங்கங்கள் 16 குதிரைகள்
இன்னும் பல்வேறு திறமைவாய்ந்த மிருகங்கள்
இன்று 12-4-46 வெள்ளிக்கிழமை தொடக்கம்

## யாழ்ப்பாணம் முற்றவெளியில்

தினந்தோறும் மாலை 6 மணிக்கும், இரவு 9½ மணிக்கும் இரு காட்சிகள்
சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் பிற்பகல் 3 மணிக்கு விசேஷகாட்சி
'ரப்பேஸிய' (Trapezium) விளையாட்டுப் பரமானந்தம்

பிரவேசச் சீட்டு விபரம்
நால்வர் இருக்ககூடிய பிரத்தியேக ஆசனம் ரூபா 25
ஒருவர் ,, ,, ,, ரூபா 7
'றிசேவ்ட்' ரூ 5. முதல் வகுப்பு ரூ 3. இரண்டாம்வகுப்பு ரூ 2.
கலரி ரூ 1.

Mis 10 9-4—30-4


வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்

Printed and Published by PANDIT V. T. SAMBANDHAN, residing at Vannarponnai West, Jaffna, for and on behalf of the Proprietors, the Saiva Paripalana Sabha, Jaffna, at their Press, the Saiva Prakasa Press Vannarponnai, Jaffna, on Friday April. 26. 1946,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org